Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, FEBRUARY 16, 2022

வியாழக்கிழமை பெப்ரவரி 16, 2023 | ஒளி: 08 கதிர்: 210 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | Free



தமிழரசுக் கட்சி மற்றும் இந்திய கூலிப்படைக்கு

## ஜனாதிபதி ரணில் ஆப்பு வைத்தார்

### கஜேந்திரகுமார் எம்.பி தெரிவிப்பு

■ கனகராசா சரவணன்

“இலங்கையின் சுதந்திர தினத்தன்று குல்லா அணிந்து எதிர்ப்பு தெரிவித்துவிட்டு, யாழில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் ஜனாதிபதி ரணிலுடன் சொந்தம் கொண்டாடி 13ஆவது திருத்தம் தருவார் என்ற இந்திய கூலிப்படைகள் எல்லோருக்கும் சேர்த்து மாவட்ட சபைகள் தான்தரமுடியம் என்று ரணில் ஆப்பு வைத்தார்” என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

எதிர்வரும் சிறுபோகத்தில்

## குறைந்த விலையில் TSP உரம் விநியோகம்

வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக எதிர்வரும் சிறு போகத்தில் விவசாயிகளுக்கு குறைந்த விலையில் ட்ரிபிள் சுப்பர் பொஸ்பேற் (TSP) உரத்தை தற்போதைய சந்தை விலையை விட குறைந்த விலையில் வழங்க நடவடிக்கை எடுப்பதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.



விவசாய பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதி அலுவலகத்தில் கடந்த 13ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலில் உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

சூதாட்ட விடுதியில் சூடு

## ஓ.ஐ.சி உள்ளிட்ட 4 பேருக்கு மரணதண்டனை

திஸ்ஸமஹாராமவில் உள்ள சூதாட்ட விடுதியை சுற்றிவளைத்து அங்கிருந்த நபரொருவரை சுட்டுக் கொன்றனர் என்ற குற்றச்சாட்டில், குற்றப் பிரிவின் பொறுப்பதிகாரி உட்பட நால்வரை குற்றவாளிகளாக இனங்கண்ட ஹம்பாந்தோட்டை மேல்நீதிமன்றம் அவர்களுக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

தொடர்ச்சி P2



எதிர்கால சந்ததியினருக்காக

## நீர்வளத்தை பாதுகாக்க வேண்டியது கடமை

நீர் முகாமைத்துவம் தொடர்பில் தற்போது நிலவும் பிரச்சினைகளால், நீர் வீண்விரயமாவதுடன், நீர் மாசடைதலும் அதிகரித்துள்ளது என்று தெரிவித்த நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், எமது எதிர்கால சந்ததியினருக்காக நீர்வளத்தை பாதுகாக்க வேண்டியது எம் அனைவரினதும் தலையாய கடமையாகும் என்று தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

மின்கட்டண அதிகரிப்புக்கு எதிராக

# நீதிமன்றத்தை நாடுவேன்



மின்கட்டணத்தை புதன்கிழமை (15) முதல் அமலாகும் வகையில் 66 சதவீத்தால் அதிகரிப்பதற்கு இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மூவர் அரசியல் அழுத்தங்களால் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் நியாயமற்ற மின்கட்டண அதிகரிப்புக்கு எதிராக நீதிமன்றத்தை நாடுவேன் என்றும் இலங்கை பொதுபயன்பாட்டு ஆணைக்குழுவின் தவிசாளர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

தடையில்லா மின் விநியோகத்துக்காக வருடாந்தம் 287 பில்லியன் ரூபாய் வருமானத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கில் மின்கட்டணத்தை 65 சதவீதத்தால் அதிகரிக்க இலங்கை மின்சார சபை இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்திருந்தது என்று குறிப்பிட்டார். மக்களின் பொருளாதார சிக்கல்களை கருத்தில் கொண்டு 36 சவீதத்தால் மின்கட்டணத்தை அதிகரித்து 142 பில்லியன் ரூபாய் வருமானம் பெறும் வகையில், அனுமதி வழங்க ஆணைக்குழு தீர்மானித்ததாகவும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2



கம்பளை சிடிஎம் கொள்ளை

## சகோதரர்கள் நால்வர் உட்பட 7 பேர் சிக்கினர்

■ நவி

கம்பளை நகரில் உள்ள தனியார் வங்கியின் பண வைப்பு இயந்திரத்தை (சிடிஎம்) 76 இலட்சம் ரூபாய் பணத்துடன் கொள்ளையிட்ட குடும்பத்தைச் சேர்ந்த நான்கு இரட்டைச் சகோதரர்கள் உட்பட ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கம்பளை பொலிஸார் தெரிவித்தனர்.

ஜனவரி 24ஆம் திகதி அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்துடன் தொடர்புடைய ஏழு சந்தேக நபர்களில் நால்வர் புத்தளம் வான வீதியில் வசிப்பவர்கள் எனவும் எஞ்சிய மூவர் கலஹா, தெல்தோட்டை கிறேட்வெளி பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

சிறப்பு விமானங்களில்

## இலங்கைக்கு விரைந்த அமெரிக்க தூதுக்குழு

### உயர்மட்ட பாதுகாப்பு கலந்துரையாடல்

உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகளை உள்ளடக்கிய 20 பேர் கொண்ட அமெரிக்க தூதுக்குழுவினர், அமெரிக்க விமானப்படையின் இரண்டு சிறப்பு விமானங்கள் மூலம் செவ்வாய்க்கிழமை (14) இரவு கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

தொடர்ச்சி P2



வைத்தியர் குற்றம் செய்திருந்தால்

## சட்ட நடவடிக்கைகளில் சங்கம் தலையிடாது

### 11 வருட கண்காணிப்புக்கு பின் கைதான வைத்தியர்

■ பாலித ஆரியவன்ச



போதை மாத்திரை விற்பனை செய்தமை குறித்து கைதுசெய்யப்பட்ட வைத்தியர் குற்றம் செய்திருந்தால் தற்போதுள்ள சட்ட நடவடிக்கைகளில் தங்களது சங்கம் தலையிடாது என்று அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பிரதி செயலாளர் பாலித ராஜபக்ஷ, புதன்கிழமை (15) தெரிவித்தார்.

முதியங்கனை ரஜமஹா விகாரைக்கு அருகில் செவ்வாய்க்கிழமை (14) இரவு விசேட அதிரடிப்படையினரால் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையில் பதுளை பொது வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டார்.

மாணவர்களை இலக்கு வைத்து போதை மாத்திரைகளை விற்பனை செய்த வைத்தியரின் நடவடிக்கைகள் குறித்து 11 வருடங்களாக கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதன் பின்னர் அவரை கைது செய்துள்ளதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து விளக்கமளித்து ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்திய போதே அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பிரதி செயலாளர் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

பதுளையில் உள்ள அவரது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம் மற்றும் அவரது வாகனத்திலும் வைத்து இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

பெரும்பாலும் கடுமையான வலி நிவாரணிகளாகவும் மனநோயாளிகளுக்கும் வழங்கப்படும் இந்த மருந்துகளை அதிக அளவு உட்கொள்வதால் ஏற்படும் பக்கவிளைவாக போதை ஏற்படுகிறது.

தொடர்ச்சி P2

## புதிய கிழக்கு கடற்படை தளபதி – ஆளுநர் சந்திப்பு

■ ஹஸ்பர்


கிழக்கு கடற்படை தளபதியாக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ரியர் அட்மிரல் எச்.ஈ.யு.டி குமார நேற்று முன்தினம் (14) கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத்தை திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் வைத்து சந்தித்தார்.

கிழக்கு மாகாணத்தின் கடல்சார் பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றதுடன், புதிய கடற்படை தளபதியின் வருகையைக் குறிக்கும் வகையில் நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது.



இந்திய விசா விண்ணப்பங்களை ஏற்பது

## மறுஅறிவித்தல் வரை மூடல்




கொழும்பிலுள்ள விசா விண்ணப்ப நிலையமான IVS Pvt Ltd செவ்வாய்க்கிழமை (14) இரவு இடம்பெற்ற பாதுகாப்பு குறித்த சில சம்பவங்கள் காரணமாக மறுஅறிவித்தல் வரையில் மூடப்பட்டிருக்கும் என்று கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம், புதன்கிழமை (15) அறிவித்தது.

தொடர்ச்சி P2

ஏழு மாவட்டங்களுக்கான

## வாக்குச்சீட்டுகளின் அச்சு பணிகள் நிறைவு

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்குச்சீட்டுகளில் ஏழு மாவட்டங்களுக்கான வாக்குச்சீட்டுகள் ஏற்கெனவே அச்சடிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க அச்சக அதிகாரி கங்கானி கல்பனா லியனகே தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




உள்ளூராட்சி மன்ற தேர்தல் விவகாரம்

## மஹிந்தவுடன் இன்று பேச்சு

### திட்டமிட்டபடி தபால் மூல வாக்களிப்பு நடக்கலாம்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக தமது ஆணைக்குழுவால் கோரப்பட்ட நிதி ஒதுக்கீடு வழங்கப்படாமை தொடர்பில் கலந்துரையாடுவதற்காக நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவை தேசிய தேர்தல் ஆணைக்குழுவுக்கு இன்றையதினம் (16) அழைப்பதற்கு ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

மேலும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் தபால் மூல வாக்களிப்பை திட்டமிட்டவாறு எதிர்வரும் 22, 23, 24 ஆம் திகதிகளில் நடத்துவதற்கான சாத்தியம் காணப்படுவதாக தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## எம்.பியிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

### ஜேர்மனியின் முதலீடுகளை எதிர்பார்க்கிறது இலங்கை



இலங்கையில் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் ஜேர்மனியின் தொழில்நுட்ப உதவிகளையும் முதலீட்டையும் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இது தொடர்பில் தொடர்ந்தும் உதவிகளை வழங்குமாறு கோரியுள்ளார்.

ஜேர்மன் பாராளுமன்ற உறுப்பினர் பீட்டர் ராம்சோர் செவ்வாய்க்கிழமை (14) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை ஜனாதிபதி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



பொலிஸாரின் பற்றாக்குறையால்

## வாக்குச்சீட்டுகளை மீள எண்ணும் நிலை

உரிய பொலிஸ் பாதுகாப்பின்றி வாக்குச் சீட்டுகள் அச்சிடப்பட்டமை தொடர்பில் அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் தொழிற்சங்க பிரதானிகளால் முன்வைக்கப்பட்ட கடும் குற்றச்சாட்டுகள் காரணமாக, ஊழியர்களின் முன்னிலையில் வாக்குச் சீட்டுகளை மீள எண்ணி சான்றிதழ் வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அரசாங்க அச்சக அதிகாரி கங்கானி கல்பனா லியனகே தெரிவித்தார்.

வாக்குச் சீட்டு அச்சிடும் பணிகளின் போது 60 பேர் கொண்ட பொலிஸ் குழுவொன்று கோரப்பட்ட போதிலும், மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களே வழங்கப்பட்டதாகவும் அதன் காரணமாக. வாக்குச் சீட்டுகள் மீள எண்ணும் பணி இன்று (16) நடைபெறவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## ஜனாதிபதி ரணில் ஆப்பு வைத்தார்

தமிழ் தேசிய மக்கள் முன்னணி சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வு மட்டு அமெரிக்கன் மிஷன் மண்டபத்தில் திங்கட்கிழமை நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், "8ஆம் திகதியன்று கொள்கை விளக்கம் செய்த ரணில் 13 திருத்தம் பற்றியோ மாகாணசபை பற்றியே ஒரு வார்த்தை கூட இல்லை. மாறாக மாவட்ட அபிவிருத்தி சபை பற்றி அறிவித்தார். எல்லாருக்கும் ரணில் ஆப்பு வைத்துள்ளார்.

இந்த ரணில் தான் தமிழீழ தேசத்துக்கு உரிமை கொடுக்க இருந்தவராம். இவரை பகிஷ்கரித்தது நாங்கள் செய்த அநியாயமாம்.

இந்தளவுக்கு ஒரு கேவலம் கெட்ட தலைமைத்துவத்தை வைத்துதான் நாங்கள் எப்போவே அழிந்திருக்க வேண்டியது. இந்த தலைவர்கள் எப்போதோ அழித்திருப்பர். இன்று கோவணம் அறுந்து போயிருக்கிறது. ரணில் தன்னுடைய உண்மையான முகத்தை காட்டியுள்ளார்.

குல்லா போட்டு எதிர்ப்பு தெரிவித்துவிட்டு யாழில் ரணிலுடன் சொந்தம் கொண்டாடினர். சிறிலங்கா சுதந்திர தினத்துக்கு காலை சாப்பிடதை மத்தியானம் மறந்துவிடுகின்ற கும்பல்தான் இவர்கள்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஸ்தாபிக்கப்பட்ட நாளில் இருந்து மக்களுக்கு தெளிவான செய்தியை சொல்லிவருகின்றோம். காலத்துக்கு காலம் மாற்றப்படுகின்ற செய்தி அல்ல.

தமிழ் தேசிய தவைலரால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து என்றைக்கு விலகவேண்டி வந்ததோ, அதற்கான காரணங்கள் அன்று தொடக்கம் இற்றைவரைக்கும் மாறாமல் ஒரே ஒரு விடயமாகத்தான் இருக்கின்றது

1987ஆம் ஆண்டு இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் 13ஆவது திருத்தச்சட்டமான மாகாணசபை முறைமையை நிறைவேற்றிய நாளில் இருந்து, அதனை விடுதலைப் புலிகள் மாத்திரமல்ல முதலாம் கட்டமாக இந்திய படைகளுடனும் பின்னர் இரண்டாம் கட்டாக சிறிலங்கா அரசாங்கத்துடனும் சேர்ந்து போராட்டத்தை காட்டிக் கொடுத்த தரப்புகளான புளொட், டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் என அனைவரும் நிராகரித்தனர்..

ஈ.பி.ஆர்.எல்.எப் மட்டும்தான் 87ஆம் ஆண்டு வடகிழக்கில் போட்டியிட்டு முதலமைச்சர் பதவியை பெற்று ஒரு சில மாதங்களிலே அந்த பதவிகளை வைத்து சாதிக்க முடியாது என்று தமிழீழத்தை பிரகடனப்படுத்தி இந்தியாவுக்கு ஓடிச் சென்றனர்

2009 மே 18ஆம் திகதி விடுதலைப் போராட்டம் மௌனிக்கப்பட்டது, 21ஆம் திகதி இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கே.எம் நாராயணன் இலங்கைக்கு வந்தார்.

அப்போது தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளை சந்தித்தது, இனழிப்பு நடைபெற்ற தருணத்திலே 2009ஆம் ஆண்டு அதனை தீர்வாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கட்டளையிட்டார். அதனை எதிர்த்தது அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மட்டும்தான்.

கூட்டமைப்பு மைத்திரி ரணிலுடன் சேர்ந்து தயாரித்த 2015 ஆரம்பித்து 2017 செப்டெம்பர் வெளியிட்ட அந்த இடைக்கால அறிக்கை சிங்களத்திலே மிகத் தெளிவாக இலங்கை ஏக்கிய ராச்சிய, ஒற்றையாட்சி என்று பதிவு செய்யப்பட்டது

தமிழில் ஒருமித்த நாடு என்ற பூச்சாண்டியை காட்டி தமிழ் மக்களே விரும்பி ஒற்றையாட்சியை ஏற்றுக் கொள்ளவைக்கும் சதி 2018 நடந்த உள்ளூராட்சி தேர்தலிலே மக்களிடம் ஒற்றையாட்சிக்கான ஆணையைக் கேட்டுதான் தமிழ் தேசிய கூட்டமைப்பு தேர்தலில் போட்டியிட்டது. அதில் வாக்கு வங்கியில் சரிவை ஏற்படுத்தினோம்" என்றார்.

# நீதிமன்றத்தை நாடுவேன்

எனினும், அரசியல் அழுத்தங்கள் காரணமாக ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மூவர் கட்டண அதிகரிப்புக்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டார்.

ஆணைக்குழுவின் சட்டத்துக்கு முரணாக செயற்படும் தரப்பினருக்கு எதிராகவும் மின்கட்டண அதிகரிப்புக்கு எதிராகவும் நீதிமன்றத்தை நாடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். மின்சாரக் கட்டணம் தொடர்பில் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் மின்சார சபை இணைந்து நடத்திய கலந்துரையாடல் இணக்கப்பாடு இன்றி நிறைவடைந்ததாக மின்சார சபையின் அதிகாரிகள், பாராளுமன்றத்தில் தேசிய பேரவைக்கு செவ்வாய்க்கிழமை (14) அறிவித்திருந்தனர்.

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு செவ்வாய்க்கிழமை கூடி இறுதித் தீர்மானம் எடுக்க எதிர்பார்ப்பதாக இதன்போது பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அதிகாரிகள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சகோதரர்கள் நால்வர் உட்பட 7 பேர் சிக்கினர்

புத்தளம் பிரதேசத்தில் வசிப்பவர்கள் கம்பளை கஹடபிட்டிய பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

கொள்ளையிடப்பட்ட பணத்தில் பதினெட்டு இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மீட்கப்பட்டுள்ளதுடன், வேன், மோட்டார் சைக்கிள், இரண்டு தங்க நெக்லஸ்கள், மூன்று அலைபேசிகள் உள்ளிட்ட பல பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த வருடம் இடம்பெற்ற அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தின் போது, புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் வீடு எரிக்கப்பட்ட போது பிரதான சந்தேகநபரிடம் இதற்கு பயன்படுத்தப்பட்ட கைத்துப்பாக்கி காணப்பட்டதுடன் துப்பாக்கி திருடப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருடப்பட்ட பண வைப்பு இயந்திரம் அகற்றப்பட்டு, கலஹா ஆல்வத்த குவாரிக்கு அருகில் உள்ள குன்றின் கீழே நூறு மீட்டர் கீழே போடப்பட்டு இருந்தது.

> **கொள்ளையிடப்பட்ட பணத்தில் பதினெட்டு இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மீட்கப்பட்டுள்ளது**

கே.டி.எச். வேன் ஒன்றும் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளதுடன் பொலிஸாரின் விசாரணையில், இந்தக் கொள்ளையர்கள் வாடகை அடிப்படையில் வேனை எடுத்துச் சென்றுள்ளனர் எனவும், இந்தக் கொள்ளைச் சம்பவத்தில் அவர்கள் ஈடுபடவில்லை எனவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சந்தேகநபர்கள் கலஹா பிரதேசத்தில் இதற்கு முன்னர் இடம்பெற்ற வங்கிக் கொள்ளை மற்றும் இரண்டு தங்க நகை கடை திருட்டுடன் தொடர்புடையவர்கள் என கண்டறியப்பட்டுள்ளது என்று தெரிவித்த பொலிஸார், சந்தேகநபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இலங்கைக்கு விரைந்த அமெரிக்க தூதுக்குழு

இந்தோ-பசிபிக் பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமெரிக்க முதன்மை துணை பாதுகாப்பு செயலாளர் ஜெடிடியா ரோயல் குழுவில் அங்கம் வகிப்பதுடன், இலங்கையின் உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகளை தூதுக்குழுவினர் சந்திக்கவுள்ளதாக தெரியவருகிறது.

அமெரிக்க தூதுக்குழுவின் வருகையையொட்டி விமான நிலையம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த சில நாள்களாக பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழுவானது போயிங் சி 17 குளோபல் மாஸ்டர் 3 விசேட விமானத்தில் இலங்கையை வந்தடைந்தாகவும் இந்தப் பயணம் உயர்மட்ட பாதுகாப்பு கலந்துரையாடல் என்று விமான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தூதுக்குழுவினர் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் விமான நிலையத்தில் இருந்து கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அதன்போது, கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் கொழும்பு நோக்கிய பாதை அவர்களது வருகையின் போது போக்குவரத்துக்காக மூடப்பட்டிருந்தது.

## ஓ.ஐ.சி உள்ளிட்ட 4 பேருக்கு மரணதண்டனை

திஸ்ஸமஹாராம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய குறித்த பொலிஸ் அதிகாரிகள் நால்வரும் 2005 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28 ஆம் திகதியன்று மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே நபரொருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட நான்கு அதிகாரிகளில் இருவர் தற்போது பொலிஸ் திணைக்களத்தில் சேவையாற்றுவதாக நீதிமன்றில் அறிவிக்கப்பட்டது.

ஹங்கம பொலிஸ் நிலைய குற்றப்பிரிவில் ஒருவரும் அரச புலனாய்வு சேவையில் ஒருவரும் கடமையாற்றுவதாக தெரிவிக்கப்பட்டது.

மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களில் ஒருவர் தற்போது பணியில் இல்லை என்பதுடன் மற்றைய அதிகாரி தற்போது ஓய்வு பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நீர்வளத்தை பாதுகாக்க வேண்டியது கடமை

தேசிய நீர் கொள்கைத்திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கான கலந்துரையாடல் மகாவலி அதிகார சபையில் அண்மையில் நடைபெற்ற போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலின் போது, நீர்வழங்கல் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆலோசனை வழங்கினார். இதன்போது, தேசிய நீர் கொள்கையொன்றை உருவாக்குவதற்கு உரிய தரப்பினருக்கு பொறுப்புக்களையும் வழங்க தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேலும், பஸ்னாகொட நீர்த்தேக்கத் திட்டம் மற்றும் நிலத்தடி நீர்த்தேக்கத் திட்டம் ஆகியவற்றின் தற்போதைய முன்னேற்றம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார நீர்ப்பாசனத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க, நீர்வழங்கல் அமைச்சின் செயலாளர் எஸ்.சமரதிவாகர, நீர்பாசன அமைச்சின் செயலாளர் யூ.டி.சி. ஜயலால், தேசிய நீர் வழங்கல் சபையின் தலைவர் என். ரணதுங்க, இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் கீர்த்தி பி. கொடகம, நீர்ப்பாசன திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் டி.பி. திரிமஹாவிதான, நீர் வழங்கல் சபையின் முகாமையாளர் வசந்த இளங்கசிங்க உட்பட அதிகாரிகள் பலரும் பங்கேற்றனர்.

## குறைந்த விலையில் TSP உரம் விநியோகம்

இக்கலந்துரையாடலில் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, உணவு பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் கலாநிதி சுரேன் படகொட ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பயிர் மஞ்சளாகும் நோயைத் தடுப்பது, உரமிடுதல் உத்திகள் மற்றும் அரிசி விற்பனையில் உள்ள சிக்கல்கள் குறித்தும் இதன் போது ஆரயப்பட்டது.

விவசாயிகள் TSP உரங்களை பயன்படுத்துவதை குறைத்தமையே பயிர் மஞ்சள் நிறமாக மாறுவதற்கு முக்கிய காரணம் என விவசாய திணைக்களம் கண்டறிந்துள்ளதுடன், எதிர்வரும் சிறு போகத்தில் இந்நோய் வராமல் தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் முக்கியமாக கலந்துரையாடப்பட்டது.

சேதன மற்றும் இரசாயன உர நிறுவனங்கள் வெவ்வேறு நிலைப்பாடுகளில் இருந்து உரங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதாக இங்கு குறிப்பிடப்பட்டது.

மேலும் இது தொடர்பாக பணியாற்றும் பல்வேறு அறிஞர்கள் மற்றும் நிறுவனங்கள் ஒரே நிலைப்பாட்டில் ஒன்றிணைந்து செயல்படுவது உகந்தது என்றும் இக்கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது.

விவசாயிகள் குறைந்த செலவில் உற்பத்தியை பெருக்கும் வகையில் மண்ணுக்கு தகுந்த பயிர் வகைகளையும், தகுந்த விவசாய உள்ளீடுகளை விவசாயத் திணைக்களம் பரிந்துரைத்தால், உள்ளீடுகளுக்கு ஏற்ற விளைச்சலை விவசாயிகள் பெற முடியும் என இக்கலந்துரையாடலில் கலந்து கொண்ட உர நிறுவன பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

சவால்களுக்கு மத்தியிலும் கூட சந்தை தேவையை விட அதிக விளைச்சலை கடந்த போகங்களில் பெற்றுக்கொடுக்க எமது விவசாயிகளால் முடிந்ததாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர இங்கு சுட்டிக்காட்டினார்.

அரிசி மேலதிகமாக காணப்படும் தற்போதைய நிலையில் களஞ்சியசாலைகளில் கையிருப்பு உள்ள பழைய அரிசியை கால்நடை தீவனத்திற்கு விற்பனை செய்வது தொடர்பில் இதன் போது கலந்துரையாடப்பட்டதுடன் அரிசிக்கு உயர்ந்த விலை கிடைத்துவருவதோடு முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலையும் அதிகரிப்பதாக சுட்டிக்காட்டப்பட்டது.

## மறுஅறிவித்தல் வரை மூடல்

சகல விண்ணப்பதாரிகளும் IVS Pvt Ltd நிறுவனத்தில் மேற்கொண்ட தமது முன்பதிவுகளை மீள்பதிவுசெய்யுமாறு கோரப்படுகின்றனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவசரமான கொன்சூலர் அல்லது விசா தேவைகளுக்காக உயர்ஸ்தானிகராலயத்தை தொலைபேசி மூலமாக அணுகுமாறும் இந்திய உயர் ஸ்தானிகராலயம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாக்குச்சீட்டுகளின் அச்சு பணிகள் நிறைவு

நிதி விவகாரம் தொடர்பில் திறைசேரியுடன் கலந்துரையாடி தீர்வு காண்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் தமக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான 70 கோடி ரூபாய்க்கான அச்சுப் பணிகள் நிறைவடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எனினும், அரசாங்க அச்சகத் திணைக்களத்துக்கு இதுவரை 40 கோடி ரூபாய் மாத்திரமே திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மஹிந்தவுடன் இன்று பேச்சு

தபால் வாக்குச்சீட்டுகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் மாத்திரம் தாமதமடையும் என்றும் எதிர்வரும் சில நாட்களுக்குள் திட்டமிடப்பட்டபடி தபால் வாக்குச்சீட்டுகள் பெற்றுக்கொடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தபால் வாக்குச்சீட்டுகள் விநியோகிக்கும் நடவடிக்கைகளை நேற்றையதினம் (15) முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் நிதி கிடைக்காமை காரணமாக தபால் வாக்குச்சீட்டுகளை விநியோகிப்பதில் தடைகள் ஏற்பட்டதாக அரசாங்க அச்சு திணைக்களம் தெரிவித்தது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் அரசாங்க அச்சகத்துடன் ஆணைக்குழு கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளது.

அச்சிடப்பட்ட வாக்குச் சீட்டுகள், ஏனைய ஆவணங்கள் மற்றும் தேர்தலை விரைவாக நடத்துவதற்குத் தேவையான பொருட்களை அரசாங்க அச்சுத் திணைக்களம் வெளியிடுவதன் முக்கியத்துவத்தை ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

தபால் மூல வாக்களிப்பிற்கான வாக்குச்சீட்டுகள் அச்சிடுவதற்கு தேவையான பணம் கிடைக்காமையால் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு கால வரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது என்று செவ்வாய்க்கிழமை (14) ஆணைக்குழு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## எம்.பியிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

ஜேர்மன்-இலங்கை இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் பீட்டர் ராம்சோர் நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ளார். ஜனாதிபதி ரணில், இரு நாடுகளுக்கும் இடையிலான கடந்த கால உறவுகளை நினைவு கூர்ந்து கலந்துரையாடலை ஆரம்பித்தார். ஜேர்மன் அரசாங்கத்தின் அனுசரணையுடன் கராப்பிட்டிய வைத்தியசாலையில் செயற்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து இந்த சந்திப்பில் மீளாய்வு செய்யப்பட்டதுடன் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

அத்துடன், இந்நாட்டில் யானை-மனித மோதலை முகாமைத்துவம் செய்வதற்கு ஜேர்மனி அறிமுகப்படுத்தியுள்ள திட்டங்களுக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்த அதேவேளை, அவற்றை நடைமுறைப்படுத்தியமைக்கு பீட்டர் ராம்சோர் மகிழ்ச்சி வெளியிட்டார். மேலும், ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரிகள் மூலம் இலங்கை மாணவர்களுக்கான பயிற்சித் திட்டங்களை மேலும் விரிவுபடுத்துவதற்கான ஆதரவை எதிர்பார்த்துள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக் குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, நிலைபெறுதகு அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் பணிப்பாளர் ரந்துல அபேவீர உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## சட்ட நடவடிக்கைகளில் சங்கம் தலையிடாது

இந்த மாத்திரைகள் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு வழங்கப்பட்டமை தெரியவந்துள்ளதாக தெரிவித்த அவர், ஒரு வைத்தியர் அதைச் செய்தால் பெரிய தவறு என்றும் அவர் குற்றம் செய்திருந்தால், தற்போதுள்ள சட்ட நடவடிக்கைகளில் தங்களது சங்கம் தலையிடாது என்றும் தெரிவித்தார்.

இது தொடர்பில் விசாரணை நடத்துமாறு சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் தமது சங்கத்தின் பொதுச் செயலாளர் கோரிக்கை விடுத்தாக குறிப்பிட்டார்.

## வாக்குச்சீட்டுகளை மீள எண்ணும் நிலை

பொலிஸ் பாதுகாப்பை வழங்குவதை பொலிஸ் பிரதானிகள் புறக்கணித்த காரணத்தால் வாக்குச் சீட்டு உள்ளிட்ட தேர்தல் அச்சிடும் நடவடிக்கைகளை பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் முன்னெடுப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

வாக்குச் சீட்டு அச்சிடுவதற்கு போதிய பாதுகாப்பை வழங்குவதற்கு தேசிய தேர்தல் ஆணைக்குழு தலையிட வேண்டும் என்றும் கங்கானி கல்பனா லியனகே கோரிக்கை விடுத்துள்ளார்.

# கொழும்பு தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் விபத்து

எஸ். கார்த்திகேசு

கொழும்பு தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெற்ற விபத்தில், திருக்கோவிலைச் சேர்ந்த இரு சகோதரர்கள் உயிரிழந்துள்ளதுடன் இருவர் படுகாய மடைந்துள்ளார்கள்.





கொழும்பு தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று (15) அதிகாலை இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்தவர்கள் திருக்கோவிலைச் சேர்ந்தவரும் கனடாவில் இருந்து விடுமுறை கழிப்பதற்காக வந்திருந்த 70 வயதுடைய தங்கராசா நாகசுந்தரம், திருக்கோவிலைச் சேர்ந்த அவரது சகோதரர் 74 வயதுடைய தங்கராசா கேதாரவரதசுந்தரம் (வாவா) ஆகியோராவர். உயிரிழந்த நாகசுந்தரத்தின் மனைவி சாருமதி, உயிரிழந்த கேதாரவரதசுந்தரத்தின் மகன் ஜசிகாந்த ஆகிய இருவரும் கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இல்லாவிட்டால்

# 30, 40 வருடங்களுக்குள் தமிழர்களே இல்லாத நிலை ஏற்படும்

### முறக்கொட்டான்சேனையில் இரா. சாணக்கியன் எம்.பி

ஆர். ஜெயஸ்ரீராம்

தமிழ் மக்களுடைய அரசியல் உரிமை வேண்டும் என்பதை மீண்டும் உறுதிப்படுத்துவதற்கான தேர்தல்தான் இந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலாகும். உள் நாட்டிற்குள்ளே ரணில் விக்கிரமசிங்க, கோட்டாபய ராஜபக்சவும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்தவர்களும், தமிழர்களுக்கு சோறும் தண்ணியும் தான் இன்று வேண்டும் என்கிறார்கள். இல்லை! தமிழர்களுக்கு அரசியல் உரிமை முக்கியம் என்று கூறுவதற்கான சந்தர்ப்பமான தேர்தலாகத்தான் நாம் இதைப் பார்க்கவேண்டும் என்று இலங்கை தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

கோறளைப்பற்று பிரதேச சபை தேர்தலில் முறக்கொட்டான்சேனையில் 14 ஆம் வட்டாரத்தில் போட்டியிடும் வேட்பாளர் குழந்தைவேல் பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், அவரை ஆதரித்தும் அரசியல் பணிமனையைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதேசத்தில் போட்டியிடும் வேட்பாளர்களும் இலங்கை தமிழரசு கட்சியின் இளைஞர் அணித் தலைவர் கி. சேயோன் உட்பட கட்சியின் மூத்த உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். இதன்போது அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

எமது மாவட்டத்துக்குள்ளே எமது மண் வளத்தை களவெடுத்து, மக்களை ஏமாற்றி, மக்களின் வாழ்வாதரத்தை அழிப்பதற்கு ராஜபக்சர்களுடன் தோள்நின்று உழைத்தவர்களுக்கு தொடர்ச்சியாக, உங்களது ஆசை வார்த்தைகளைக் கேட்டு ஏமாறமாட்டோம் என்று மட்டக்களப்பு மக்கள் விடுக்கும் செய்தியாக இத்தேர்தல் உள்ளது.

மாவட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி சார்ந்த வேலைகளை நாங்களே செய்யவேண்டிய நிலை காணப்படுகிறது. காணி பிரச்சினையாக இருக்கட்டும்; சட்டவிரோத மண் அகழ்வு நடவடிக்கையாக இருக்கட்டும்; ஏன் மீனவர்களது மீன் பிடித் தொழிலாக இருக்கட்டும் நாங்களே முன்னின்று செய்பட வேண்டியுள்ளது.

தற்போது தொல்பொருள் என்ற பேரில் மாவட்டத்தில் 600 இடங்களை கைவசப்படுத்தியுள்ளனர். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இல்லாவிட்டால் 30, 40 வருடங்களுக்குள் இப்பிரதேசத்தில் தமிழர்களே இல்லாத நிலை ஏற்படும். எனவேதான் எமது மக்களை பல்வேறு பிரச்சினைகளில் இருந்து பாதுகாப்பதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பை ஆதரிக்க வேண்டும். எனவே ஒரு இனத்திற்கான செய்தியை கூறும் தேர்தலாக இந்தத் தேர்தலை நாம் பார்க்கிறோம் என்று அவர் தொடர்ந்து உரையாற்றினார்.






## சுதந்திரமானதும் நீதியானதுமான

# தேர்தலை நடத்த ஒத்துழைப்பு வழங்குங்கள்

ஹஸ்பர்

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடாத்த ஒத்துழைப்புகளை பூரணமாக வழங்குமாறு திருகோணமலை மாவட்ட உள்ளூர் அதிகாரசபைகளுக்கான தெரிவத்தாட்சி அலுவலரும், திருகோணமலை மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளருமான ஆர். சசீலன் தெரிவித்தார்.

அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், சுயேட்சை குழுவினுடைய தலைவர்களுடன் நேற்று முன்தினம் (14) இடம்பெற்ற கலந்துரையாடல் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற பொழுதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் ஒன்பதாம் திகதி தேர்தல் தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. எட்டாம் திகதி காலை 7 மணி முதல் திருகோணமலை அநுராதபுர சந்தியில் அமையப்பெற்றுள்ள விபுலானந்தா கல்லூரியில் வாக்கு பெட்டிகள் உட்பட ஏனைய பொருட்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு பொலிஸ் பாதுகாப்புடன் கொண்டு செல்லப்பட இருக்கின்றது. வாக்குப் பெட்டிகள் விநியோகிக்கும் நிலையங்கள் 22 ஏற்படுத்தப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் மொத்தமாக 321 வாக்களிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை மூன்று இலட்சத்து மூவாயிரத்து எழுநூற்று எழுபத்தைந்து (303,775) ஆகும். மொத்தமாக 129 வட்டாரங்கள் காணப்படுகின்றன. ஒன்பதாம் திகதி வாக்களிப்பு நிறைவு பெற்றவுடன் குறித்த உள்ளூர் அதிகார சபை பிரதேசத்தில் பொருத்தமான மூன்று வாக்களிப்பு நிலையங்களை ஒருங்கிணைத்து பொருத்தமான ஒரு நிலையத்தில் வாக்களிப்பு நடவடிக்கைகள் வட்டார அடிப்படையில் பிரத்தியேக ரீதியாக வாக்குகள் எண்ணப்படும்.

குறித்த வட்டாரங்களில், குறித்த வாக்கெண்ணும் நடவடிக்கைகள் நிறைவு பெற்றதன் பின்னர், திருகோணமலை அநுராதபுர சந்தியில் இருக்கக்கூடிய விபுலானந்தா கல்லூரிக்கு வாக்குப்பெட்டிகள் பொலிஸ் பாதுகாப்புடன் அதனுடைய இறுதி முடிவுகள் சகிதம் கொண்டு வரப்படும்.

அநுராதபுர சந்தியில் அமையப்பெற்றுள்ள விபுலானந்தா கல்லூரியில் உள்ளூர் அதிகார சபை தொடர்பான இறுதி முடிவுகள் உள்ளூர் அதிகாரசபை மட்டத்தில் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரால் அறிவிக்கப்படும்.

ஒரு கட்சிக்கு ஒரு வட்டாரத்தில் ஒரு கிளை அலுவலகம் அமைப்பதற்கும், அந்த உள்ளூர் அதிகார சபை பிரதேசத்தில் ஒரு மத்திய அலுவலகத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியும். குறித்த அலுவலகங்கள் தேர்தல் நடைபெறுவதற்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னர் அகற்றப்பட வேண்டும் எனவும் இதன் போது உதவி தேர்தல் ஆணையாளரால் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். பார்த்தீபன், மாவட்ட நீர்ப்பாசன திணைக்களத்தின் நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.கே.டி நிரஞ்சன் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

# மக்களின் உணர்வுகள் மதிக்கப்படும்

## வெடுக்குநாறி மலையில் அமைச்சர் டக்ளஸ் உறுதி

வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வர் ஆலயத்தில் தொடர்ச்சியாக பூஜை வழிபாடுகளை மேற்கொள்வது உறுதிப்படுத்தப்படும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த பகுதியில் உள்ள தொல்லியல் சின்னங்கள் மற்றும் இயற்கை வளங்களின் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்தும் வகையில் அனைவரின் செயற்பாடுகள் அமைவது அவசியம், எனவும் தெரிவித்துள்ளார்.

பாரம்பரியமாக இந்துக்களினால் வெடுக்குநாறி மலையில் உள்ள ஆதி லிங்கேஸ்வர் ஆலயத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பூஜை வழிபாடுகளை தொடர்வதற்கு, அரசாங்க திணைக்களங்கள் சிலவற்றின் கடமைசார் செயற்பாடுகள் இடையூறாக அமைந்துள்ள நிலையில், குறித்த பகுதிக்கு நேற்று(15) கண்காணிப்பு பயணம் ஒன்றினை மேற்கொண்ட போதே, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், குறித்த விடயம் தொடர்பாக பிரதேச மக்களின் கருத்துக்களையும் எதிர்பார்ப்புக்களையும் கேட்டறிந்த அமைச்சர், மக்களின் உணர்வுகளை பாதிக்கும் வகையில் அரசாங்க திணைக்களங்களின் செயற்பாடுகள் அமையுமாயின், அவைதொடர்பாக கரிசனை செலுத்தப்படும் என்று உறுதியளித்தார்.

மேலும், சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளதுடன், துறைசார் அமைச்சர்களுடனும் பிரஸ்தாபித்து சுமூகமான தீர்வு காணப்படும் எனவும் தெரிவித்தார்.

ஏற்கனவே வெடுக்குநாறி விவகாரம் தொடர்பாக, தமிழ் மக்களின் பிச்சினைகள் மற்றும் அபிலாசைகளை தீர்ப்பதற்கான அமைச்சரவை உப குழுவில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் பிரஸ்தாபிக்கப்பட்டது.

அதன்போது, சம்மந்தப்பட்ட பகுதிக்கு நேரடியாக சென்று நிலமைகளை ஆராய்வதுடன், சம்மந்தப்பட்ட துறைசார் அமைச்சர்களுடன் இணைந்து சுமூகமான தீர்வை காணுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# மட்டக்களப்பு கோட்டைக்கு களவிஜயம்

எம்.எஸ்.எம் நூர்தீன்

மட்டக்களப்பு வின்சன்ட் உயர் தர பாடசாலையின் சாரணிய அணியினர், வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஒல்லாந்தரால் நிர்மாணிக்கப்பட்ட மட்டக்களப்பு கோட்டைக்கு கள விஜயத்தை நேற்று (15) மேற்கொண்டனர்.

பாடசாலையின் சாரணிய இயக்கத்துக்குப் பொறுப்பான ஆசிரியை ஜெய சக்தி புவீந்திரனின் வழிகாட்டலில் ஐந்து சாரண அணியின் 25 மாணவர்கள் இவ்விஜயத்தில் கலந்துகொண்டனர்.



# ரணவிரு சேவா அமைப்பின் ஊடாக பல நலன்புரி சேவைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்

ஏ.எச்.ஏ ஹூஸைன்

மட்டக்களப்பு மாவட்ட ரணவிரு சேவா குடும்பங்களிடமிருந்து நலன்புரி சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான வேண்டுகோள்கள் வருவது மிகக் குறைவாக உள்ளது. அவ்வாறு வேண்டுகோள்கள் வரும்பட்சத்தில் நாட்டின் வேறு பகுதிகளிலுள்ள ரணவிருசேவா குடும்பங்களுக்கு வழங்குவதுபோன்று இங்கும் நனல்புரி சேவைகளை வழங்க முடியும் என ரணவிரு சேவா கிழக்கு மாகாண பணிப்பாளர் டபிள்யூ.டி. ஹேமச்சந்திர தெரிவித்தார்.

போரினால் பாதிக்கப்பட்ட பாதுகாப்புத் தரப்பு குடும்பங்களின் நலன் பேணும் அமைப்பான ரணவிரு சேவா சங்கத்தின் ஒன்று கூடல் நிகழ்வு அதன் மாவட்டத் தலைவர் முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் எஸ்.ஏ.சி அப்துல் வஹாப் தலைமையில் மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலக மண்டபத்தில் நேற்று (15) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.ஆர் குமாரசிறி, ரணவிரு சேவா மாவட்ட இணைப்பு உத்தியோகத்தர் சமத் லியனகே உட்பட மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த ரணவிரு சேவா குடும்பங்களின் உறுப்பினர்கள் சுமார் 60 இற்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய ரணவிரு சேவா கிழக்கு மாகாண பணிப்பாளர் டபிள்யூ.டி. ஹேமச்சந்திர, மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த யுத்தத்தின்போது பாதிக்கப்பட்ட சுமார் 144 இற்கு மேற்பட்ட பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்த குடும்பங்கள் உள்ளார்கள்.

இவர்களில் தெரிவு செய்யப்பட்ட சிலருக்கு ஏற்கெனவே சிறந்த வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. அதேநேரம் ரணவிரு சேவா அமைப்பினூடாக பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் ரணவிரு சேவா குடும்பங்களிலுள்ள மாணவர்களுக்கு கல்விக்கான உதவிகள்,



அங்கவீனர்களுக்கான உதவிகள், இலவச மருத்துவ வசதிகள் குறைந்த வட்டியிலான வீட்டுக் கடன்கள், சுயதொழிலுக்கான கடன் வசதிகள் உட்பட பல்வேறான நலன்புரி சேவைகள் உள்ளன. ஆயினும் இவ்வுதவிகளைக் கோரி மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து வேண்டுகோள்கள் வருவது குறைவாகவே உள்ளது. 2023ஆம் ஆண்டில் நீங்கள் பல்வேறு நலன்புரி சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்" என்றார்.





# சிங்கள சமூகத்துக்கான சிவில் வலையமைப்பு உருவாக்கம்

எப். முபாரக்

அகம் மனிதாபிமான வள நிலையத்தால் கந்தளாய் பிரதேச செயலகத்தில் சிங்கள சமூகம் வாழும் கிராமங்களை உள்ளடக்கிய 15 கிராம சேவகர் பிரிவில் உள்ள சங்கங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கி, கந்தளாய் பிரதேசத்துக்கான சிவில் வலையமைப்பை உருவாக்கும் கலந்துரையாடல் திங்கட்கிழமை (13) அகம் மனிதாபிமான வள நிலையத்தின் செயற்திட்ட முகாமையாளர் சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, ச. பத்மசீலன், இஸ்மியா ஆகியோர் நிறுவனம் தொடர்பாகவும், குறித்த வலையமைப்பு தொடர்பாகவும் விளக்கமளித்தனர்.

வடக்கில் கடலட்டை பண்ணைகளால்

# மீன்வளத்துக்கு ஆபத்து

## விஞ்ஞான ரீதியாக உறுதி எனத் தெரிவிப்பு

நிதர்சன் வினோத்

விஞ்ஞான ஆய்வின்படி, வடபகுதியில் கடல் அட்டை பண்ணைகள் அமைப்பது இயற்கை வளத்தை பாதிக்கும் என வடமாகாண கடற்றொழில் இணையத்தின் இணைப்பாளர் அன்ரனி யேசுதாசன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடலட்டைப் பண்ணையால் பாதிக்கப்படுகிற வட மாகாண மீனவ பிரதிநிதிகளை உள்ளடக்கிய கலந்துரையாடல் நடத்தப்பட்டது. அந்தக் கலந்துரையாடலில் கடலட்டை பண்ணை மீனவர்களுக்கு சாதகமானதா, பாதகமாக என ஆராயப்பட்டது.

ஒட்டுமொத்த விஞ்ஞான பூர்வமான கருத்தின்படி, இலங்கை கடற்பரப்புக்குள் குறிப்பாக வடபகுதியில் அட்டைப்பண்ணைகளை உருவாக்குவது, முறையற்ற விடயமாகவும் அது மீனவர்களுடைய எதிர்கால வாழ்வை பாதிக்கின்ற ஒரு விடயமாகவும் உறுதிப்படுத்தப்பட்டது.

வடபகுதியிலே மேற்கொள்ளப்படுகின்ற அட்டைப்பண்ணைகள், பாரம்பரிய மீன்பிடி முறைக்கு எதிரானதாகவும் இயற்கை வளங்களை அழிக்கின்றதாகவும் மீன்கள் புலம்பெயரும் இடங்களை தடுப்பதுடன், மீன்கள் முட்டையிடுகின்ற, குஞ்சு பொரிக்கின்ற இடங்கள் மறுக்கப்படுகின்றதாக காணப்படுகிறது என விஞ்ஞானபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் வடபகுதியில் 17 விதமான அட்டைகள் காணப் படுகின்றன. அந்த அட்டைகள் அழிக்கப்படுவதற்கு இந்த அட்டை பண்ணைகள் ஒரு காரணமாக இருக்கும் என முடிவெடுக்கப்பட்டது.


ஆகவே, இதுதொடர்பாக அமைச்சரும் நக்ரா, நாறா நிறுவனங்கள், கடற் தொழில் துறைசார் பரிசோதர்கள் ஆழமாக ஆய்வு செய்து, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முக்கியமாக சீனாவினுடைய அட்டை குஞ்சுகளை கொண்டு வந்து தான், இந்த அட்டை பண்ணைகளிலே அட்டைகள் வளர்க்கப்படுகின்றன. இது கலப்பு முறையான ஒரு செயற்பாடாக காணப்படுகின்றது. இந்த விடயமானது சாதாரணமாக வடபகுதியில் இருக்கின்ற இயற்கையாக உருவாகின்ற அட்டைகளின் அழிவுக்கு காரணமாக இருக்கின்றது என்றார்.

மாணவிகளை வீதிகளில் தொந்தரவு செய்பவர்களை

# கைது செய்வதற்கு விசேட பொலிஸ் குழுக்கள்

எம்.எஸ்.எம் ஹனிபா



அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவிகளுக்கு, வீதிகளில் தொந்தரவு செய்பவர்களை கைது செய்வதற்கு விசேட பொலிஸ் குழுக்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக, அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பெரும் குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் எம்.எஸ். அப்துல் மஜீட் செவ்வாய்க்கிழமை (14) தெரிவித்தார்.

ஆலையடிவேம்பு, அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை, அக்கரைப்பற்று ஆகிய பிரதேச பாடசாலைகளில் குறிப்பாக, பெண் பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலைகள், பிரத்தியேக வகுப்புகள் ஆரம்பமாகும் மற்றும் முடிவடையும் நேரங்களில், இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் மாணவிகளுக்குப் பின்னால் கூட்டமாகச் சென்று தொந்தரவு செய்வதோடு, தொலைபேசியில் புகைப்படம் எடுப்பதாகவும் பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதனால் மாணவிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதோடு, சில மாணவிகள் இடைநடுவில் கல்வியை கைவிட்டுள்ளதாக சுட்டிக்காட்டபட்டுள்ளது.

குறித்த பெண் பாடசாலைகள் அமையப் பெற்றுள்ள பிரதேசங்களில், உள் வீதிகளில், பாடசாலை ஆரம்பிக்கும் முடியும் நேரங்களில் விசேட போக்குவரத்து பொலிஸாரை சிவில் உடையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளதாவும் கைது செய்யப்படுபவர்களுக்கு எதிராக நீதிமன்றினுாடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

# இரணைதீவில் பொது மண்டபத்தை திறவுங்கள்

நடராசா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி, இரணைதீவில் அமைக்கப்பட்டுள்ள பொது மண்டபத்தைத் திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என இரணைதீவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இரணைதீவில் சுயமாக குடியேறி, தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள குடும்பங்கள், அடிப்படை வசதிகளற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றன. இந்நிலையில் நான்கு மில்லியன் ரூபாய் நிதி செலவில் அமைத்து முடிக்கப்பட்டுள்ள பொது மண்டபத்தைத் திறந்து வைப்பதன் மூலம், இரணைதீவுக்கு வருகின்ற அதிகாரிகள் தங்கி செல்கின்ற இடமாக இதைப் பயன்படுத்த முடியும். இதற்கான வசதிகள் இம்மண்டபத்தில் காணப்படுகின்றது.

இரணைதீவில் குடியேறி உள்ள மக்கள் தற்காலிக குடிசைகளில் வாழ்ந்து வருகின்றனர். பெரும் காற்றுடன் கூடிய மழை ஏற்படுகின்ற போது, இரணைதீவில் உள்ள தேவாலயத்திலேயே தஞ்சம் அடைய வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

இரணைதீவுக்கும் இரணைமாதா நகருக்கும் இடையிலான படகுச் சேவை ஆரம்பிக்கப்படவில்லை. இரணைதீவில் பாடசாலை இயங்க வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. வைத்தியசாலை இயங்கவில்லை. மின்சார வசதிகள் உருவாக்கப்படவில்லை. குடிநீர் வசதிகள் உருவாக்கபடவில்லை.

1992ஆம் ஆண்டுக்கு முன்னர் மக்கள் எப்படி இரணைதீவில் வாழ்ந்தார்களோ அவ்வாறான வசதிகளை உருவாக்கி கொடுக்க வேண்டியது அரசினது பொறுப்பு. ஆனால் இதுவரை அடிப்படை வசதிகள் அற்ற நிலையில், இரணைதீவில் சுயமாக குடியேறி உள்ள மக்கள் வாழ்ந்த வரும் நிலையில் அமைக்கப்பட்டுள்ள பொது மண்டபத்தைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சிங்களத்தில் நீதிமன்ற கட்டளையை கொண்டு வந்த பொலிஸார்

## ஏற்க மறுத்த சிறிதரன் எம்.பி



நிதர்சன் வினோத்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனை நீதிமன்றம் வருகை தருமாறு கூறும் பொலிஸ் கட்டளையை நேற்று முன்தினம் பொலிஸார் வழங்கியிருந்தனர். அந்தக் கட்டளை சிங்கள மொழியில் மாத்திரம் இருந்ததன் காரணமாக, "சிங்கள மொழி எனக்கு வாசிக்கத் தெரியாது. எனவே, இந்தக் கட்டளையை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது" எனவும் கூறி அவர்களிடம் மீளக் கையளித்தார்.

பின்னர் அவர்கள், தமிழில் மொழிபெயர்த்து கொண்டு வந்து கொடுத்தபோது, நீதிமன்றத்துக்கு தன்னை வருவதற்கு அழைக்கும் அழைப்பை, நீதிமன்றம் தான் வழங்கமுடியுமே தவிர, நீதிமன்றத்துக்கு அழைக்கும் அழைப்பை பொலிஸாரால் எனக்கு வழங்கமுடியுமா என பாராளுமன்ற உறுப்பினர் வினவிய போது பொலிஸாலர் அமைதியாக இருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.









# அறுவடை விழா

மட்டக்களப்பு சிறைச்சாலையிலுள்ள சிறைக்கைதிகளால் செய்கை பண்ணப்பட்ட நெற்செய்கையின் அறுவடை விழா, நேற்று (15) காலை சிறைச்சாலை அத்தியட்சகர் என். பிரபாகரன் தலைமையில் நடைபெற்றது. சிறைச்சாலைக்குச் சொந்தமான, திருப்பெருந்துறையிலுள்ள காணியில், சுமார் 10 ஏக்கர் நிலப்பரப்பில் இவ் வேளாண்மை செய்கை பண்ணப்பட்டிருந்தது. பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து, அறுவடை விழா இடம் பெற்றது. சிறைச்சாலை அதிகாரிகள், மாவட்ட கமத்தொழில் அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

ரீ.எல் ஜவ்பர்கான்

சம்மாந்துறை பிரதேச சபை:

# புதிய தவிசாளராக ஐ.எல்.எம்.மாஹிர் தெரிவு



பாறுக் ஷிஹான்

சம்மாந்துறை பிரதேச சபையின் புதிய தவிசாளராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் ஐ.எல்.எம் மாஹிர் தெரிவாகியுள்ளார்.

சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் இராஜினாமா செய்தமையினால் பிரதேச சபையின் புதிய தவிசாளர் தெரிவுக்கான விசேட அமர்வு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என். மணிவண்ணன் தலைமையில் செவ்வாய்க்கிழமை (14) இடம்பெற்றது.

# அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரியாக வைத்தியர் இஸ்ஸதீன் நியமனம்



அபு அலா

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரியாக பொத்துவிலைச் சேர்ந்த டொக்டர் அப்துல் மஜீத் முஹம்மது இஸ்ஸதீன் தனது கடமைகளை நேற்று முன்தினம் (14) பொறுப்பேற்றுக்கொண்டார்.

அப்துல் மஜீத் முஹம்மது இஸ்ஸதீன், 1998 பேராதனை பல்கலைக்கழகத்தில் இருந்து மருத்துவராக வெளியேறிய இவர், 1998 - 2002 கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைத்தியராக கடமையாற்றிவந்த நிலையில், 2002-2004 நிந்தவூர், பொத்துவில் மாவட்ட வைத்தியசாலைகளுக்கு மாவட்ட வைத்திய அதிகாரியாகவும் கோமாரி CDMH வைத்தியசாலையின் வைத்திய பொறுப்பதிகாரியாகவும் , 2010-2012 பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரியாகவும், 2018-2019-2020 திருக்கோவில் சுகாதார வைத்திய அதிகாரியாகவும் கடமையாற்றியுள்ளார்.

பின்னர் 2021-2022 பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகராக கடமையாற்றி வந்தார்.

மன்னார் மாவட்டத்தில்

# 'நாடு' இன நெல் உற்பத்தியாளர்களுக்கு அவசர செய்தி

எஸ். றொசேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்டத்தில் 'நாடு' இன நெல்லை நிபந்தனையின் அடிப்படையில் விவசாயிகளிடம் இருந்து பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளதாக, மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 'நாடு' இன நெல்லினை மட்டும் பின்வரும் நிபந்தனை அடிப்படையில் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆகக் கூடிய ஈரப்பதன் 14 % மற்றும் ஆகக் கூடிய நெற்பதரினளவு 9 % உடைய நாடு நெல்ரூபா 100/- இற்கும்,ஈரப் பதன் 14 % ற்கும் அதிகமான மற்றும் 22 % அதற்கு குறைந்த நாடு நெல் ரூபா 88/-க்கும் கொள்வனவு செய்யப் படவுள்ளது.

இத் திட்டத்தில் நெல்லை வழங்குவதற்கு தயாராகவுள்ள விவசாயிகள் இது பற்றிய தகவல்களை உடனடியாக கமநல அபிவிருத்தி திணைக்கள மாவட்ட காரியாலயத்துக்கு (023-2222162) திங்கள் தொடக்கம் வெள்ளி வரை, காலை 9.00 தொடக்கம் மாலை 4.மணி வரை பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# நெடுந்தீவு தமிழர்களின் பூர்வீக அடையாளம்

## இதையும் சிங்கள தேசம் ஆக்கிரமிக்க முயல்கின்றது

சுப்பிரமணியம் பாஸ்கரன்

நாங்கள் நீண்ட வரலாற்றைக் கொண்ட இனம். எமது உரிமைகளுக்காக கடந்த 80 வருடங்களுக்கு மேலாக போராடி வருகின்றோம். நெடுந்தீவு பிரதேசம் எங்களது பூர்வீக அடையாளம். இதையும் சிங்கள தேசம் ஆக்கிரமிக்க முயல்கின்றது. இப்போதும் கரையோரப் பகுதிகள் தொடர்ந்தும் கடற் படையினரின் கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றது.

நெடுந்தீவுக்கான இறங்குதுறை கூட படையினரின் முழுமையான கட்டுப்பாட்டில் இருப்பதுடன் பயணிகள் சுதந்திரமாக சென்றுவர முடியாத நிலை காணப்படுகிறது என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவு பிரதேச சபைக்கான உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் அறிமுக நிகழ்வும் தேர்தல் செயற்பாட்டு அலுவலகமும் நேற்று (15) நெடுந்தீவில் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



சாய்ந்தமருது அல்–ஹிலாலில்

# 44 மாணவர்கள் சித்தி

எம்.எஸ்.எம் ஸாகிர்

புலமைப் பரிசில் பரீட்சையில் சாய்ந்தமருது கமு/ கமு/ அல்ஹிலால் வித்தியாலயத்தில் இருந்து 44 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று, பாடசாலைக்குப் பெருமை தேடிக் கொடுத்துள்ளதாக அதிபர் யூ.எல். நஸார் தெரிவித்தார்.

இப்பாடசாலையில் இருந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குக் தோற்றிய 244 மாணவர்களில் 232 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. இது 95.6 சதவீதமாகும்.

பொத்துவில் பஸ் டிப்போவுக்கு

# காணி அனுமதிப் பத்திரம்

எம்.எஸ்.எம் ஹனிபா



பொத்துவில் பிரதான பஸ் டிப்போவுக்கான காணி அனுமதிப் பத்திரம், உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டு உள்ளதாக, பொத்துவில் பஸ் டிப்போ முகாமையாளர் ஏ.எம் முபாறக் நேற்று (15) தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்து சபையின் தவிசாளர் எஸ்.எம். டி.எல்.கே.டி அல்விஸ், பிரதி தவிசாளர் உட்பட உயர் அதிகாரிகள் பொத்துவிலுக்கு விஜயம் செய்து, தரமுயர்த்தப்பட உள்ள பஸ் டிப்போவை நேரடியாக சென்று பார்வையிட்டிருந்தனர். பஸ் டிப்போவுடன் இணைந்ததாக அதி நவீன பஸ் தரிப்பு நிலையம் நிர்மாணிக்கப்பட உள்ளதாகவும் பொத்துவில் சாலை தரமுயர்த்தப்படும் பட்சத்தில், தூரப் பிரதேசங்களுக்கான நவீன பஸ் சேவைகளும் ஆரம்பிக்கப்படும் எனவும், இதனால் பொத்துவில் பாணாம, லகுகல, கோமாரி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் பெரும் நன்மை அடைவார்களெனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம் முஷாரபால், பொத்துவில் உப பஸ் டிப்போவை பிரதான பஸ் டிப்போவாக தரமுயரத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மலையக கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வு

■ எஸ். கே.குமார்

மலையக நட்சத்திர கலைப்பேரவை, ஐக்கிய மலையக மாமன்றம், மனித உரிமைகள் பாதுகாப்பு அமைப்பு ஆகிய அமைப்புகள் ஒன்றிணைந்து நுவரெலியா புதிய நகர மண்டபத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் இறுதியில் மலையக கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வு நடை பெறவுள்ளது.

இந்த கௌரவிப்பு வைபவத்தில் கலந்துக்கொள்ள விரும்பும் மலையக கலைஞர்கள் அவர்களின் கலை படைப்புகளையும் அவர்களின் ஆக்கங்களையும் மலையக நட்சத்திர கலைபேரவைக்கு உடனடியாக அனுப்பி தங்களுடைய பெயர்களை பதிவு செய்துக்கொள்ளும்படி மலையக நட்சத்திர கலைப் பேரவையின் உபதலைவரும்,

ஐக்கிய மலையக மாமன்றத்தின் தலைவரும், மனித உரிமைகள் பாதுகாப்பு அமைப்பின் நுவரெலியா மாவட்ட கலைத்துறை பொறுப்பாளருமான தேசமாணிய பாலகிருஷ்ணன் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மலையகத்தில் இலைமறை காயாக இருக்கும் கலைஞர்களின் படைப்புகளை வெளி கொண்டுவரவும் கலைஞர்களை ஊக்குவிக்கவும் அவர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்தில் இந்த கௌரவிப்பு நிகழ்வு நடத்த தீர்மானித்துள்ளோம் என்றார்.

எனவே, இந்த இலைமறை காயாக இருக்கும் கலைஞர்களின் கலை துறைக்கு ஊக்கமளிப்பதற்காக இந்த கலைஞர்களை முதலில் ஒன்று சேர்ப்பதற்காக இந்த கலைஞர் கௌரவிப்பு வைபவத்தை ஏற்பாடு செய்துள்ளோம். எனவே மலையக கலைஞர்கள் எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி இலக்கம் 4 பலவகை கடை தொகுதி, பதுளை வீதி, நுவரெலியா. தொலைபேசி இலக்கம் :- 0776000052 அல்லது 0707000055, மலையகத்திலுள்ள அனைத்து தமிழ் கலைஞர்களையும் தொடர்பு கொள்ளும்படி ஏற்பாட்டாளரான சுரேஷ் தெரிவித்துள்ளார்.

# தேசிய மக்கள் சக்தியின் கூட்டத்திற்கு திரண்ட மக்கள்

■ சுமணசிறி குணதிலக

தேசிய மக்கள் சக்தி ஊடாக மொனராகலை மாவட்டத்தின் உள்ளூராட்சி சபைகளுக்கு போட்டியிடும் வேட்பாளர்களின் வெற்றிக்காக,நேற்று முன்தினம் (14) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

மொனராகலை- புதியசந்தை வளாகத்தில் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திசாநாயக்க தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சுமார் எட்டாயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



## சிறுமிகளுடன் தேயிலை மலைக்குள்

# நுழைந்த இராணுவ சிப்பாய் கைது

■ ரஞ்சித் ராஜபக்ஷ

சிறுமிகள் இருவரை துஸ்பிரயோகப்படுத்தி இருக்கலாம் என்ற சந்தேகத்தில் இராணுவ சிப்பாய் ஒருவர் நேற்றுமுன்தினம் (14) கைதுசெய்யப்பட்டுள்ளார் என நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

நோர்வூட்- வெஞ்சர் தோட்டத்தைச் சேர்ந்த குறித்த இராணுவ சிப்பாய் விடுமுறை நிமித்தம் தனது வீட்டுக்கு வருகைத் தந்துள்ளதுடன், குறித்த தோட்டத்தைச் சேர்ந்த 10 மற்றும் 8 வயது சிறுமிகள் இருவரை தேயிலை மலைக்கு அழைத்துச் சென்று, துஸ்பிரயோகம் செய்ய முயற்சித்துள்ளார்.

இதன்போது ஒரு சிறுமி அவரிடமிருந்து தப்பியோடி வந்ததை அவதானித்த பிரதேசவாசிகள் சந்தேகநபரை பிடித்து நோர்வூட் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் குறித்த சிறுமிகளின் பெற்றோரால் நோர்வூட் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், சிறுமிகள் இருவரும் மருத்துவ பரிசோதனைக்காக டிக்கோயா ஆரம்ப வைத்தியசாலையின் விசேட வைத்தியரிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் கிளிநொச்சி பிரதேசத்திலுள்ள இராணுவ முகாமொன்றில் கடமையாற்றி வருவதாகத் தெரிவித்த பொலிஸார், அவரை ஹட்டன் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளதாகத் தெரிவித்தனர்.

## மாபெரும் மக்கள் சக்தி

# காங்கிரஸ் பக்கமே உள்ளது

### என்கிறார் ராமேஷ்வரன் எம்.பி

2018 இல் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் வெற்றி நடைபோட்டதுபோல, இம்முறையும் காங்கிரஸ் வெற்றிவாகை சூடும். ஏனெனில் அன்றும் இன்றும் என்றும் மக்கள் சக்தி எம்பக்கமே என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் கொட்டகலை பிரதேச சபைக்கு போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து ஆரம்பக் கட்ட பிரச்சார கூட்டம் நேற்று முன்தினம் (14) கொட்டகலை பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், 2018 ஆம் ஆண்டில் புதிய முறைமையின்கீழ் தான் உள்ளூராட்சிசபைத் தேர்தல் நடைபெற்றது. அப்போது எமக்கு ஆட்சிபலம்கூட இருக்கவில்லை. எனினும், எமது பெருந்தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமான் ஐயா, எம்மையெல்லாம் தைரியமாக வழிநடத்தினார். திட்டங்களை வகுத்தார். தனித்து சேவல் சின்னத்தில்



போட்டியிட்டோம். வெற்றிபெற்றோம். சபைகளில் தவிசாளர் பதவிகளைக்கூட எம்மவர்களே வகிக்கின்றனர்.

அன்று எம்முடன் இருந்த 'ஆறுமுக சாமி' என்ற மாபெரும் சக்தி இன்று எம்முன் இல்லை. இருந்தாலும் எங்கள் இதய தெய்வமாக அவர் வாழ்ந்துக்கொண்டே இருக்கின்றார். அதேபோல அமைச்சரும், காங்கிரஸின் பொதுச்செயலாளருமான ஜீவன் தொண்டமான் எங்களுக்கெல்லாம் பக்கபலமாக இருந்து வருகின்றார்.

எனவே, இம்முறையும் வெற்றி நிச்சயம். மாபெரும் மக்கள் சக்தி காங்கிரஸ் பக்கமே உள்ளது. இங்கு விமர்சன அரசியல் தேவையில்லை. நாம் எமது திட்டங்களை முன்வைத்தே பிரச்சாரம் செய்கின்றோம். மக்களும் அதனையே விரும்புகின்றனர் என்றார்.








# மஹா சிவலிங்க ரத பவனி

மஹாசிவாராத்திரி தினத்தை முன்னிட்டு பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தின் மஹா சிவலிங்க ரத பவனி 13ஆம் திகதி தலவாக்கலை நகரின் டிஐஆர் கோவிலிருந்து ஆரம்பித்து 15ஆம்திகதி (நேற்று) வட்டவளை நகரத்தை வந்தடைந்தது. 'மானிடன் மறந்த இறைவன் மண்ணிற்கு வந்துள்ளார் மறக்காமல் வாருங்கள் தரிசனம் காண்பதற்கு' என்ற தொனிப்பொருளில் மஹா சிவலிங்க ரத பவனி 13ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 22ஆம்திகதி வரை நடைபெறவுள்ளது. (இரா. யோகேசன்)

# நடுவீதியில் கரணமடித்த காரும் மோட்டார் சைக்கிளும்


■ நவி

கண்டி- தவுலகல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வெலிகல்ல பிட்டவல பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

கண்டியிலிருந்து பயணித்த மோட்டார் சைக்கிள் இ.போ.ச பஸ் ஒன்றை முந்தி செல்ல முயற்சித்ததைக் கண்டு, கம்பளை பகுதியில் இருந்து எதிர்த்திசையில் பயணித்த காரின் சாரதி, தமது காரை ஓரமாக்க முயன்ற போது, கார் தலைகீழாக புரண்டு விழுந்தது.

இதனையடுத்து மோட்டார் சைக்கிளும் நடு வீதியில் கரணமடித்து விபத்துக்குள்ளாகியுள்ளதுடன், மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் காயங்களுக்கு உள்ளாகி கெலம்பதெனிய பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார் .

எனினும் காரின் சாரதி, காயங்கள் எதுவும் இன்றி உயிர் தப்பியுள்ளதுடன், விபத்து தொடர்பான விசாரணைகளை தவுலகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## பொலிஸ் அதிகாரி தாக்கியதாகத் தெரிவித்து

# வேட்பாளர் ஒருவர் முறைப்பாடு

■ ஷேன் செனவிரத்ன

கண்டி தலைமையக பொலிஸ் நிலையத்தின் சிறு முறைப்பாடுகள் பிரிவின் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் நிலையத்திற்குள் தன்னை தாக்கியதாகத் தெரிவித்து, ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் ஒருவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

தான் ஒரு தேவைக்காக பொலிஸ் நிலையத்தக்குச் சென்ற போது, பொறுப்பதிகாரியுடன் ஏற்பட்ட வாக்குவாதத்தின் போதே இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திகன- ரஜவெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த இவர், ஐக்கிய மக்கள் சக்தி ஊடாக அம்பிட்டிய -மல்பான வட்டார வேட்பாளராக போட்டியிடுவதாகவும் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து, பொலிஸ் உயர் அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, முறைப்பாட்டாளர் மற்றுமொரு முறைப்பாட்டாளரின் உதவிக்கு வந்தபோது, விசாரணைக்கு இடையூறாக இருந்ததால், சிறு முறைப்பாடுகள் பிரிவின் நிலைய பொறுப்பதிகாரியுடன் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

எனினும் குறித்த பொலிஸ் அதிகாரிக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதால், உதவி பொலிஸ் அதிகாரி சி. டி. இளங்கோர்ன் தலைமையில் விசாரணை நடத்தப்படும் என்றார்.

# மாணவர்களுக்காக போதை மாத்திரை விற்ற வைத்தியர் கைது

■ ராமு தனராஜா

போதை மாத்திரை விற்பனையில் ஈடுபட்ட வைத்தியர் ஒருவர் பசறை விசேட அதிரடிப் படையினரால் பதுளையில் கைது செய்யப்பட்டார்.

பதுளை பிரதேசத்திலுள்ள வைத்தியசாலை ஒன்றில் கடமையாற்றும் குறித்த வைத்தியர், தனது காரில் போதை மாத்திரை விற்பனையில் ஈடுபடுவதாக பசறை ஆக்கரத்தன்னை விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து, சந்தேகநபரான வைத்தியரின் கார் சோதனைக்கு ட்படுத்தப்பட்டுள்ளது.

இதன்போது காரிலிருந்து 145 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளதோடு பதுளை- மயிலகஸ்தன்னையைச் சேர்ந்த 44 வயதுடைய வைத்தியரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் மிக நீண்ட காலமாக பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து, போதை மாத்திரைகள் விற்பனையில் ஈடுபட்டு வருவதாக விசேட அதிரடிப் படையினரின் புலனாய்வு தகவல் கிடைக்கப்பெற்றதாக தெரிவித்தனர்.

சந்தேக நபரும் போதை மாத்திரைகளும் பதுளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு சந்தேக நபரை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.



# ரதல்ல விபத்தில் மூவருக்கு காயம்

■ டி.சந்ரு

நானுஓயா- ரதல்ல குறுக்கு வீதியில் ஓட்டோ குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் மூவர் பலத்த காயமடைந்த நிலையில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து நேற்றுமுன்தினம் (14) இரவு 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

நுவரெலியாவில் இருந்து நானுஓயா- ரதல்ல குறுக்கு வீதியூடாக தலவாக்கலையை நோக்கி சென்று கொண்டிருந்த ஓட்டோவொன்று, சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

கடந்த மாதம் 20ஆம் திகதி விபத்தொன்று இடம்பெற்று ஏழு பேர் உயிரிழந்த இடத்திலேயே இந்த விபத்தும் இடம்பெற்றுள்ளது.

இவ் விபத்தில் ஓட்டோவில் பயணித்த மூன்று ஆண்கள் பலத்த காயமடைந்த நிலையில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

விபத்து தொடர்பில் நானுஓயா போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# நாட்டிலிருந்து நிபுணர்களின் வெளியேற்றம் சொல்லும் பாடம்

சட்ட ரீதியாகவும் சட்ட விரோதமாகவும் பல இலங்கையர், நாட்டை விட்டு வெளியேறுவது அதிகரித்த வண்ணமுள்ளது. போதியளவு உணவு, பணம், தொழில் வாய்ப்புகள் இன்மை போன்ற காரணங்களால் இந்தநிலை தோன்றியுள்ளது. இந்தியா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு படகுகளின் மூலம் செல்ல முயல்வோரின் தொகையும் அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டில் ஏற்பட்ட, பெருமளவு நெருக்கடி நிலை காரணமாகப் பாதிக்கப்பட்ட இலங்கையர்கள், தேசத்தின் நிலை தொடர்பில் வருத்தம் கொள்ளாது, தமது பொருளாதார சுதந்திரத்துக்கு முக்கியத்துவமளித்து இவ்வாறான தீர்மானங்களை மேற்கொள்கின்றனர்.

நடப்பு ஆண்டின் ஜனவரி முதல் இதுவரையான காலப்பகுதியில் பெருமளவான இலங்கையர்கள் தொழில் வாய்ப்புக்காக வெளிநாடு சென்றுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது. மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில் வாய்ப்புகளுக்காக செல்வோரின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்துள்ளதாக பணியகம் வெளியிட்டிருந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

பிராந்தியத்தில் உயர் எழுத்தறிவு வீதம் மற்றும் சிறந்த இலவச கல்விக் கட்டமைப்பைக் கொண்ட இலங்கையிலிருந்து இவ்வாறு பலர் வெளிநாட்டுக்கு செல்வது, குறிப்பாக நிபுணர்கள் புலம்பெயர்வது என்பது நாட்டின் வளத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என அஞ்சப்படுகின்றது.

மேலும், கனடா போன்ற நாடுகளில் விசேடத்துவமான தொழிற்றுறைகளில் உயர் வருமானத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றமை, பல தேசிய வைத்தியசாலைகளைச் சேர்ந்த தாதியர்கள் மற்றும் கணக்காளர்களுக்கு கவர்ச்சிகரமான தெரிவாக அமைந்துள்ளன.

வைத்தியர்கள், தாதியர்கள் போன்றோர் வைத்தியசாலைகளில் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். குறிப்பாக, மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாட்டுடன், அவர்களுக்கான சம்பளக் கொடுப்பனவில் மேற்கொள்ளப்படும் வரி அறவீடுகள் போன்றவற்றால் விரக்தியுடனான மனநிலையில் காணப்படுகின்றனர். புதிதாக கோரப்படும் கடவுச்சீட்டுக்களுக்கான கேள்வியும், கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 250 சதவீத்தால் அதிகரித்துள்ளதென அறிந்து கொள்ள முடிகின்றது.

தகவல் தொழில்நுட்பம், கணினித் துறையைச் சேர்ந்தவர்களும் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஐரோப்பிய நாடுகளுக்கு புலம்பெயர்ந்து வருகின்றனர். 2017 ஆம் ஆண்டளவில் 120,000க்கும் அதிகமான ஊழியர்களுடன், 1.2 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாகப் பெற்ற இலங்கை, கணினி மென்பொருள் வெளிக்கள சேவை வழங்கும் நாடுகளின் தரவரிசையில் முதல் 30 நாடுகளுக்குள் ஒன்றாகத் திகழ்ந்த நிலையில், தற்போது நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளது.

இலங்கையில் திறமைசாலிகளை தக்க வைத்துக் கொள்வதற்காக, இலங்கையின் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் சம்பளக் கொடுப்பனவுகளை அமெரிக்க டொலரில் வழங்கவும் முன்வந்துள்ளன. ஆனாலும், அதனால் பெரிதும் பயன் கிடைத்தாக தெரியவில்லை.

இவ்வாறு வெளிநாடுகளுக்கு செல்லும் திறமைசாலிகளை தக்க வைத்துக் கொள்ள வேண்டியது, பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் மீள்கட்டியெழுப்பல் செயற்பாடுகளுக்கு இன்றியமையாத தேவையாகும். அவர்களை தடுக்க முடியாவிடினும், அடுத்த தலைமுறை இளைஞர்களுக்கு அந்தப் பதவிகளை ஏற்றுக் கொள்ளக்கூடிய தயார்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டியது முக்கியமானதாகும் என்பதை நாம் வலியுறுத்திக் குறிப்பிட விரும்புகின்றோம்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# பிரபாகரனை உயிர்ப்பித்தல் எனும் பித்தலாட்டம்



புருஜோத்தமன் தங்கமயில்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிரோடு இருப்பதாக, உலக தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் அறிவித்திருக்கிறார்.

நீண்ட காலமாக, உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருக்கும் நெடுமாறன், பொது நிகழ்வுகளில் பெரிதாக பங்கேற்பதில்லை. கடந்த திங்கட்கிழமை (13) தஞ்சாவூரில் அமைந்திருக்கின்ற முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர், பிரபாகரன் உயிரோடு இருப்பதாக வெளிப்படுத்தினார். இதன்போது, அவருக்கு அருகில் காசி ஆனந்தனும் அமர்ந்திருந்தார்.

தலைவர் பிரபாகரனின் மனைவி என்று, முகத்தை மூடி முக்காடு அணிந்த பெண்ணொருவரை அறிமுகப்படுத்தி, அண்மையில் சுவிஸில் பணம் வசூலிக்கும் கும்பலொன்று மோசடி நாடகத்தை ஆடியிருந்தது. இந்தச் சம்பவம் நிகழ்ந்து, சில நாள்களிலேயே, நெடுமாறன் ஊடகங்களை அழைத்து, பிரபாகரன் உயிரோடு இருப்பதாக அறிவிக்கின்றார்.

சர்வதேச சூழலும் ராஜபக்ஷர்களுக்கு எதிராக சிங்கள மக்கள் போராடும் சூழலும் நிலவும் நிலையில், பிரபாகரன் உயிரோடு இருப்பதை வெளிப்படுத்துவதற்கான நேரம் கனிந்திருப்பதாக நெடுமாறன் தெரிவித்திருக்கிறார். அத்தோடு, தமிழீழ மக்களும் உலகத் தமிழர்களும், பிரபாகரனின் செயற்றிட்டங்களுக்கு ஒருங்கிணைந்து ஆதரவளிக்க வேண்டும் என்றும் கூறியிருக்கிறார்.

தலைவர் பிரபாகரன் உயிரோடு இருப்பதான அறிவிப்பை வெளியிட்ட நெடுமாறன், "விடுதலைப் புலிகள் வலிமையாக இருந்த காலத்தில், இந்தியாவுக்கு எதிரான சக்திகள், வடக்கு - கிழக்கில் காலூன்ற அனுமதிக்கவில்லை. இந்தியாவுக்கு எதிரான நாடுகளுடன் தொடர்புகளைப் பேணவும்கூட, பிரபாகரன் விரும்பவில்லை" என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

பிரபாகரன் உயிரோடு இருப்பதான அறிவிப்பு, ஒருநாள் ஊடகப் பரபரப்போடு அடங்கிவிட்டது. ஆனால், முள்ளிவாய்க்காலில் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்து, கிட்டத்தட்ட 14 ஆண்டுகளாகிற நிலையில், திடீரென பிரபாகரன் உயிரோடு இருப்பதான அறிவிப்பு வெளியிடப்படுதற்கான காரணங்களைக் குறித்து கவனமாக பார்க்க வேண்டியிருக்கின்றது. அதிலும், உடலளவில் தளர்ந்திருக்கின்ற நெடுமாறன், ஏன் அதைச் செய்தார்? அவரோடு காசி ஆனந்தன் இருக்க வேண்டிய அவசியம் பற்றியெல்லாம் கவனம் செலுத்த வேண்டியிருக்கின்றது.

அத்தோடு, இந்தியா குறித்து, அங்கு வெளிப்படுத்தப்பட்ட கருத்துகள், உண்மையில் நெடுமாறனின் செயற்பாடுக்கு ஏதோவொரு பின்னணி இருப்பதான சந்தேகத்தை அதிகரிக்கின்றது.

பிரபாகரன் உயிரோடு இருப்பதான நெடுமாறனின் அறிவிப்பை, இலங்கை இராணுவம் உடனடியாக மறுத்துவிட்டது. இறுதி மோதல்களின் இறுதி நாள்களில் பிரபாகரன் கொல்லப்பட்டதாக கூறி, உடலம் ஒன்றை உலகுக்கு இலங்கை அரசாங்கம் வெளிப்படுத்தியது. அப்போது இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகவும், இறுதிக் கட்டத்தில் இராணுவத்தின் ஒரு படையணியின் தளபதியாக செயற்பட்ட தற்போதைய பாதுகாப்பு செயலாளரான கமல் குணரட்னவும் பிரபாகரன் போர் முனையிலேயே இறுதி வரையில் போராடி வீழ்ந்ததாக தெரிவித்து இருக்கிறார்கள்.

தென் இலங்கையில் இனவாத மதவாத சக்திகள், குறிப்பாக ராஜபக்ஷ தரப்பு, புலிகள் மீள உருவாக்கப்படுகிறார்கள்; நாட்டை அழிக்கப்போகிறார்கள் என்று தேர்தல் அரசியலுக்காக அடிக்கடி கூறுவதுண்டு. ஆனால், எந்தவொரு தருணத்திலும் பிரபாகரன் உயிரோடு இருப்பதாக அவர்கள் கூறுவதில்லை. ஏனெனில், பிரபாகரனை கொன்று நாட்டை காப்பாற்றிவிட்டதாக கூறி, தென் இலங்கையில் இரண்டு தடவைகள் ஆட்சி பீடமேறிவிட்டார்கள். அப்படியான நிலையில், பிரபாகரனைக் காட்டி, புலிப்பூச்சாண்டியை சிங்கள மக்களிடம் காட்ட முடியாது என்று அவர்களுக்கு தெரியும்.

தமிழ் மக்களைப் பொறுத்தளவில் தலைவர் பிரபாகரன், தமிழ் மக்களின் விடுதலைக்காக உடல், பொருள், ஆவியை மாத்திரமல்ல; குடும்பத்தையும் கொடையாக வழங்கிப் போரிட்டவர் என்கிற உணர்நிலை உண்டு. அவர் வாழ்நாள் பூராவும் போராளியாக வாழ்ந்து, மாவீரர் ஆனவர்.

தலைவர் பிரபாகரனை கொன்றுவிட்டதாக, இந்தியாவும் இலங்கையும் கடந்த காலங்களில் பல தடவைகள் அறிவித்திருக்கின்றன. அப்போதெல்லாம் புலிகள் இயங்கு நிலையிலேயே இருந்திருக்கிறார்கள். சிலகாலத்தின் பின்னர், பிரபாகரன் தன்னை வெளிப்படுத்தி இருக்கிறார். ஆனால், முள்ளிவாய்க்கால் என்பது ஆயுதப் போராட்டக்களம் தமிழர் தரப்பிலிருந்து மௌனிக்கப்பட்ட களம். அந்தக் களத்தில் இருந்து ஆயிரக்கணக்கான மக்களும் போராளிகளும் மரணிக்கும் போது, தலைவர் பிரபாகரன் தப்பியோடவோ, தலைமறைவாக வாழவோ தலைப்பட மாட்டார் என்று மக்களுக்கு தெரியும். ஏன், எதிரிகளுக்கும் துரோகிகளுக்கும் கூட தெரியும்.

தலைவர் பிரபாகரனின் இறந்த நாளென்று இலங்கை அரசு அறிவித்திருக்கின்ற திகதியை, தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளாமல் இருக்கலாம். ஆனால், அவர் களத்தில் போராடி மாவீரராக வீழ்ந்தார் என்பதை ஏற்றுக் கொள்வதில் எந்த சங்கடமும் இல்லை. ஈழத் தமிழ் மக்களின் அடையாளமாக பிரபாகரன் நீடிப்பதற்கும் அதுதான் காரணம்.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், இறுதி மோதல் காலத்தில் இராணுவத்தோடு சேர்ந்து இயங்கிய புளொட் அமைப்பில் தலைவரான தர்மலிங்கம் சித்தார்த்தன் கூட, தமிழ் மக்களுக்கு போராடப்புறப்பட்டவர்களில் உறுதியும் தியாக சிந்தையும் கொண்டவர் பிரபாகரன் மட்டுமே என்று ஊடகங்களில் வெளிப்படுத்தி இருக்கிறார்.

தமிழ் ஆயுதப் போராட்ட இயக்கங்கள் தங்களுக்கு இடையில் முரண்பட்டுக் கொண்ட பின்னர், புலிகள் ஏக இயக்கமாக வளர்ந்தார்கள். பின்னரான காலத்தில் ஈரோஸ், டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் உள்ளிட்ட இயக்கங்கள் புலிகளோடு இணக்கமாக இயங்கவும் செய்தன. ஆனால், புலிகள் இருக்கும் வரையில் அவர்களோடு எந்தச் சமரசத்துக்கும் வராத இயக்கங்களாக ஈ.பி.டி.பியையும், புளொட்டையும் கூற முடியும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட காலத்தில் அதில், புளொட்டை உள்வாங்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தபோது, அதற்கு புலிகள் இணங்கினார்கள். ஆனால், அப்போதும் புளொட் அமைப்பு இலங்கை அரசாங்கத்தை பகைத்துக் கொள்ள முடியாது என்று கூறி கூட்டமைப்பில் இணையவில்லை.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி என்கிற பெயரில் அரசியல் கட்சியையும் புளொட் அமைப்பின் உறுப்பினர்களைக் கொண்டு அப்போது அரசாங்கம் பதிவு செய்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. அப்படியான நிலையில், புலிகளை என்றைக்குமே ஏற்காத சித்தார்த்தனே, பிரபாகரனின் விடுதலைப் போராட்டத்துக்கான அர்ப்பணிப்பு குறித்து மெச்சியிருக்கிறார்.

அப்படியான நிலையில், தங்களின் தேசிய தலைவராக பிரபாகரனை வரிந்து கொண்ட தமிழ் மக்கள், அவரை எந்த இடத்தில் வைத்திருப்பார்கள் என்பது அனைவருக்கும் தெரியும்.

பிரபாகரனை உயிர்ப்பிக்க முனையும் தரப்புகள் யார் யாரெல்லாம் என்று பார்த்தால், புலம்பெயர் தமிழ் மக்களிடம் பண வசூல் செய்து, வயிறு வளர்த்து கொழுக்க நினைக்கும் தரப்புகள் முன்னணியில் இருக்கின்றன. இவர்களுக்கு உழைப்பு என்கிற வார்த்தைக்கான அர்த்தம் தெரியாது. அடுத்தவர்களின் பணத்தில் சொகுசாக வாழ்வது என்கிற ஒன்று மட்டுந்தான் தெரியும். அதற்காக வாழ்நாள் பூராவும் மோசடிகளில் ஈடுபடுவார்கள். அவர்களுக்கு தமிழ் ஈழமும், விடுதலைப் புலிகளும், பிரபாகரனும் பணம் கொட்டும் மரங்கள். அவர்களை முன்னிறுத்தினால், தமிழ் மக்களை இலகுவாக ஏமாற்றலாம் என்பது தெரியும்.

இன்றும்கூட பிரபாகரன் உயிரோடு இருக்கின்றார், போராடுவதற்கு நிதி கோருகிறார் என்றால் சிலர் அதனை நம்பி ஏமாறத் தயாராக இருக்கிறார்கள். அவர்களுக்கு, முள்ளிவாய்க்கால் முடிவை ஏற்று, அடுத்த கட்டத்தை நோக்கி நகர்வதிலுள்ள மனத்தடை மிகப்பெரியது.

நெடுமாறனின் 'தலைவர் உயிரோடு இருக்கின்றார்' என்ற அறிவிப்பில், இந்தியா குறித்து வெளிப்படுத்தப்பட்ட விடயம் கவனிக்கப்பட வேண்டியது. ஏனெனில், விடுதலைப் புலிகளை முற்றாக அழிக்க வேண்டும் என்கிற நோக்கத்தை, இந்தியா பிரதான இலக்காகக் கொண்டிருந்தது. புலிகள் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டார்கள்; பிரபாகரனின் உடலம் மீட்கப்பட்டு அடையாளம் காணப்பட்டது என்பது வரையில் இந்தியா மிகக்கவனமாக இருந்தது.

புலிகளுக்கு எதிரான யுத்தத்தை இலங்கை அளவுக்கு இந்தியாவும் தன்னுடைய சொந்த யுத்தமாகவே நினைத்து நடத்தியது. இறுதி மோதல் காலத்தில் இந்தியா, இலங்கைக்கு வழங்கிய ஆயுத உதவிகள், தொழில்நுட்ப உதவிகள் குறித்து மஹிந்த ராஜபக்ஷ, மங்கள சமரவீர போன்றவர்கள் பல தடவைகள் வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

ஏன், கோட்டாபய ராஜபக்ஷ கூட இந்தியாவின் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை தான் நடத்தியதாக கூறியிருக்கிறார். அப்படியான நிலையில், புலிகளுக்கும் இந்தியாவுக்குமான உறவு நிலை என்ன என்பது அனைவருக்கும் வெளிப்படையானது.

புலிகள் 2000க்குப் பின்னர், இந்தியாவோடு முரண்படுவதை பெருமளவு தவிர்த்துக் கொண்டார்கள். ஒரு வகையிலான நெகிழ்வுப் போக்கோடு பணியாற்றவே விரும்பினார்கள். ஆனால், தமிழகத்துக்கு சில கிலோ மீற்றர்கள் தொலைவிலுள்ள இலங்கையின் வடக்கு - கிழக்கு பகுதியில் ஆயுதப் போராட்ட இயக்கமொன்று, அரசொன்றை நிறுவி நிலை பெறுவதை என்றைக்கும் இந்தியா விரும்பியிருக்கவில்லை. ஆனால், புலிகள் அழிக்கப்பட்டால், புவிசார் அரசியலில் இன்னுமின்னும் மேலெழலாம் என்று நினைத்த இந்தியாவுக்கு, ராஜபக்ஷர்களும் தென் இலங்கையும் வழங்கியது பெரும் ஏமாற்றமே.

குறிப்பாக, அச்சுறுத்தல் அளிக்கும் அளவுக்கு, இந்தியாவுக்கு எதிராக தென்இலங்கை, சீனாவை வளர விட்டிருக்கின்றது. அப்படியான நிலையில், தன்னுடைய பிடியை, இந்தியா மீண்டும் தக்க வைப்பதற்கு பிரபாகரனை உயிர்ப்பிக்கும் தேவை எழலாம். அதற்கான கருவிகளாக நெடுமாறன் போன்றவர்கள் கையாளப்படலாம். ஆனால், அதில் ஏமாறுவதற்கு தமிழ் மக்கள் இப்போது தயாராக இல்லை. ஏன், சிங்கள மக்கள் கூட தயாராக இல்லை என்பதுதான் உண்மை.



## வாழ்வியல் தரிசனம்

பரந்த உலகில் பல நூறு மொழிகள் உண்டு. இவற்றுள் சில பேச்சு மொழியாகவும் எழுத்துரு இல்லாத மொழிகளும் அடக்கம். ஆனால், இவற்றுக்கு அப்பால், பொது மொழியும் உண்டு. இது நீங்கள் நினைப்பது போல் இல்லை.

ஆங்கிலம் தான் பரந்த ஒரு மொழி என்று கூறுவார்கள். நான் சொல்வது இதை அல்ல! மக்கள் அனைவரும் மனமூடாகப் பேசும் ஒரே மொழி; மனம் பேசும் மௌன மொழிதான் பொதுவானதாகும்.

தனிமையில் மனம் பலவிடயங்களை ஒவ்வொரு மனிதனுடனும் பேசிய வண்ணமே இருக்கின்றது.

குதூகலத்துடன், துன்பத்துடன், கிளர்ச்சியுடன் தமக்குள்ளே நெஞ்சத்துடன் இரண்டறக் கலப்பது, மௌன நிலையில்த்தான் என்பதை உணர்க!

துன்பத்தில் மனம் பேசி, சில சமயங்களில் ஆறுதல்படுத்தும்; எனினும் இதுவே, குழப்பத்துக்குள்ளும் இணைத்து விடும். எவரிடமும் சொல்லக்கூடாத விடயத்தை, இதயத்துக்கு ஊடாக மனிதன் பரிமாறிக்கொள்கின்றான்.

அந்தரங்கங்களின் ஆழத்தை மனம் மட்டுமே அறியும். உண்மையையும் பொய்யையும் இது அறியும். சுத்தமான மனம் பரந்தது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### இரவில் காட்டு யானைகளும் பகலில் குரங்குகளும் பயிர்களை அழிக்கின்றன

கிளிநொச்சியில் வன்னேரிக்குளம், ஜெயபுரம் ஆகிய பகுதிகளில் இரவு வேளைகளில் காட்டு யானைகளின் தொல்லையும் பகல் வேளைகளில் குரங்குகளின் தொல்லையும் அதிகரித்துக் காணப்படுவதாகவும், இதன் காரணமாக, தமது விவயாய நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாதிருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் வாழும் 70 சதவீதமானோர் விவசாயத்தை வாழ்வாதாரத் தொழிலாக கொண்டிருக்கின்றனர். தற்போது, நெல் செய்கையை விட, மேட்டு நிலப் பயிர்ச் செய்கைகளும் அதிகளவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக வன்னேர்க்குளம், ஆணை விழுந்தான், ஜெயாபுரம் ஆகிய பகுதிகளில், தற்போது காட்டு யானைகளின் தொல்லையும் குரங்குகளின் தொல்லையும் அதிகரித்து காணப்படுவதால், மேற்கொள்ளப்பட்டுள்ள மேட்டு நிலப் பயிர் செய்கைகளையும் அதிகளவில் யானைகளும் குரங்குகளும் அழித்து வருவதாக விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனால், பாரியளவில் அழிவுகள் ஏற்படுவதால் நட்டத்தை எதிர் கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளனர். எனவே சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யது பாஸ்கரன்.

செங்கல் பட்டு

# வழி தெரியாமல் தவித்த நபர் அடித்துக் கொலை

வழி தெரியாமல் தவித்து நின்ற நபரை, திருடன் என நினைத்து இளைஞர்கள் சிலர் தாக்கியதில் அவர் உயிரழந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது

செங்கல்பட்டு மாவட்டம், தாழம்பூர் பகுதியில் பிரபல நிறுவனமொன்றின் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றது. இதில் ஏராளமான வட மாநில தொழிலாளர்கள் கட்டுமான பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில் குறித்த கட்டுமானப் பணியில் ஈடுபட்டு வந்த மேற்கு வங்கத்தைச் சேர்ந்த காசேட்ரா மோகன் என்பவர், கடந்த 12 ஆம் திகதி இரவு தனது குடியிருப்பில் இருந்து வெளியே உணவருந்தச் சென்றுள்ளார்.

இந்நிலையில் உணவருந்திவிட்டு மீண்டும் தனது குடியிருப்பிற்கு செல்ல வழிதெரியாமால் திகைத்து நின்றுள்ளார். அவர் சந்தேகத்துக்கு இடமான வகையில் இருப்பதைக் கவனித்த அப்பகுதி மக்கள் மற்றும் இளைஞர்கள், அவர் திருட வந்துள்ளார் என எண்ணி அவரைப் பிடித்து கட்டையாலும், கையாலும் கண்மூடித்தனமாக தாக்கி வீதி ஓரத்தில் உள்ள கம்பத்தில் கட்டிப் போட்டுள்ளனர்.


இந்நிலையில் இது குறித்து அப்பகுதி பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து அங்கு வந்த பொலிஸார் இரத்தக் காயங்களுடன் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த அந்த நபரை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்.

இதையடுத்து அவர் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (14 ) உயிரிழந்தார்.

இச் சம்பவத்தை கொலைவழக்காகப் பதிவு செய்த பொலிஸார் தாக்குதல் நடத்திய ஆறு பேரைக் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கேரளா

# ATM ஐ வெடி வைத்து தகர்த்துக் கொள்ளை



கேரளாவின் பாலக்காடு அருகே, முகமூடி அணிந்த மர்ம நபர் ஒருவர், வெடிவைத்து ஏ.டி.எம் இயந்திரத்தைத் தகர்த்துப் பணத்தைக் கொள்ளையடிக்க முயன்றுள்ளார்.

சம்பவ தினத்தன்று எழும்பலாசேரி பகுதியில் உள்ள ஏடிஎம் மையத்துக்கு வந்த குறித்த நபர், ஏடிஎம்-க்கு அடியில் வெடி வைத்ததில் அது வெடித்துச் சிதறியுள்ளது.

இதன்போது உடனடியாக எச்சரிக்கை மணி ஒலித்ததால் வங்கி கிளை மேலாளர் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளார்.

எனினும் பொலிஸார் அங்கு செல்வதற்குள் அந்நபர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளான்.

எவ்வாறு இருப்பினும் வெடி வைத்தும் எந்திரத்தில் பணம் வைக்கப்பட்டிருந்த அறை திறக்காததால் கொள்ளை தவிர்க்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சென்னை



# திரையரங்குகளுக்கு எதிராக நடவடிக்கை

கூடுதல் கட்டணம் வசூலிக்கும் திரையரங்குகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சிங்கம் 3 , பைரவா படங்கள் பண்டிகை காலங்களில் வெளியானபோது கூடுதல் கட்டணம் வசூலித்ததாக சென்னை உயர் நீதிமன்றத்தில் தேவராஜன் என்பவர் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இது தொடர்பாக அரசு மற்றும் காவல்துறையிடம் புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த மனு நேற்றைய தினம் விசாரணைக்கு வந்த போது . தமிழக அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில் , கூடுதல் கட்டணம் வசூலிக்கப்பட்ட திரையரங்குகளில் அபராதம் வசூலிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து அரசு நிர்ணயித்த கட்டணத்தை விடக் கூடுதல் கட்டணம் வசூலிக்கும் திரையரங்குகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதேசமயம் கூடுதலாகக் கட்டணம் வசூலிக்கப்படுகிறதா? என தமிழாக அரசு கண்காணிக்க வேண்டும் எனவும் சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புதுச்சேரி



# கூகுளால் காட்டுப்பன்றிகளை கட்டுப்படுத்தும் விவசாயி

புதுச்சேரி பாகூர் அருகே விவசாயி ஒருவர் கூகுளின் உதவியுடன், 5,000 ரூபாய் செலவில் தானியங்கி ஒலிப்பெருக்கி அமைத்து, விவசாய நிலத்தில் காட்டுப்பன்றிகள் புகுவதை கட்டுப்படுத்தியுள்ளார்.

சோரியாங்குப்பம், குருவிநத்தம், உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் நெல், கரும்பு, வேர்கடலை, காய்கறி வகைகள் உள்ளிட்டவற்றை பயிரிட்டு வருகின்றனர்.

இரவு நேரங்களில் இவற்றை காட்டுப்பன்றிகள் சேதப்படுத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் பிள்ளையார்குப்பத்தை சேர்ந்த விவசாயியான உமாசங்கர் என்பவர், தான் வேர்கடலை சாகுபடி செய்துள்ள நிலத்தில் காட்டுப் பன்றிகளை பயமுறுத்தும் வகையில், கூகுளின் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி யானை, நாய் குறைத்தல், போன்ற ஒலிகளை எழுப்பும் வகையிலான ஒலிப்பெருக்கியை வைத்துள்ளார்.

இதனால் தற்போது காட்டுப் பன்றிகள் வருவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புதுடெல்லி

# காதலியைக் கொன்று உடலை குளிரூட்டியில் வைத்த காதலன்

புதுடெல்லியில்கடந்த சில மாதங்களுக்கு முன்னர் 'ஷ்ரத்தா' என்ற இளம்பெண்ணை , அவரது காதலன் அஃப்தாப் அமீன் என்பவர் கொலை செய்து, 35 துண்டுகளாக வெட்டி வீசிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதேபோன்று, புதுடெல்லியில் மற்றொரு சம்பவமும் நிகழ்ந்துள்ளமை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

சாஹில் கெஹலாட் என்ற நபர், தன்னுடன் இணைந்து வாழ்ந்த காதலியைக் கொன்று அவரது உடலை குளிரூட்டியில் மறைத்து வைத்திருந்த நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் பொலிஸாரின் விசாரணையில் சாஹில் கெஹலாட் , இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்யத் திட்டமிட்டிருந்ததாலேயே தன்னுடன் இணைந்து வாழ்ந்த பெண்ணைக் கொலை செய்துள்ளார் எனத் தெரிய வந்துள்ளார்.

மேலும் காதலியைக் கொலை செய்த சில மணி நேரத்தில், வேறு பெண்ணை சாஹில் திருமணம் முடித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்துக் கொலை செய்யப்பட்ட பெண்ணின் உடலை மீட்ட பொலிஸார் அதனை பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.



உத்தர பிரதேசம்

# காதல் ஜோடியின் உயிரைப் பறித்த காதலர் தினக் கொண்டாட்டம்


உத்தரபிரதேசத்தைச் சேர்ந்தவர் விபு சர்மா. 27 வயதான இவர் பெங்களூரில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்துள்ளார்.

இந்நிலையில் விபு சர்மாவ அதே நிறுவனத்தில் பணிபுரியும் சுப்ரியா துபே என்ற 26 வயதான பெண்ணைக் காதலித்து வந்துள்ளார்.

எனினும் இவர்களது காதல் விவகாரம் இவர்களது பெற்றோர்களுக்குத் தெரியாது எனக் கூறப்படுகின்றது.

இதனிடையே, காதலர் தினத்தைக் கொண்டாடக் கடந்த சில நாட்களுக்கு முன் விபு சர்மாவும், சுப்ரியா துபேவும் கோவா சென்றுள்ளனர்.

இந்நிலையில், காதலர் தினம் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்ட நிலையில் திங்கட்கிழமை நள்ளிரவு முதல் காதல் ஜோடி கோவாவின்



பலோலம் கடற்கரையில் சுற்றி திரிந்துள்ளனர்.

அப்போது எதிராராத விதமாக இருவரும் அலையில் சிக்கி கடலில் மூழ்கினர். இது குறித்து மீட்புக்குழுவினருக்கு தகவல் கொடுக்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த மீட்புக்குழுவினர் கடலில் மூழ்கிய 2 பேரையும் மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தனர்.

ஆனால், 2 பேரையும் பரிசோதித்த வைத்தியர்கள் அவர்கள் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக அறிவித்துள்ளனர்.

நவநாகரீக ஆடை விற்பனையில்

# தடம் பதிக்கும் ஸ்ரீயாணி டிரெஸ் பொயின்டின் Khayal



கண்டி மாநகரில், 'The Khayal Collection' நவநாகரீக ஆடைகள், நகைகள். அணிகலன்கள், ஒப்பனைப் பொருட்கள், வீட்டு உபகரணங்கள் ஆகியவற்றின் உறைவிடமாகத் திகழும் 'ஸ்ரீயாணி டிரெஸ் பொயின்ட்', இலங்கையில் தைத்த ஆடைகள், மாபெரும் விற்பனையாளர்களில் ஒன்றாகத் திகழ்கின்றது.

1993ஆம் ஆண்டு கேகாலை நகரில் நான்கு பணியாளர்களுடன் மட்டும் எளிமையாக ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீயாணி டிரெஸ் பொயின்ட், தற்போது எட்டு காட்சியறைகள், பிரமாண்டமான களஞ்சியசாலை மட்டுமன்றி 2,000 பணியாளர்களுடன் கண்டி, குருநாகல், நீர்கொழும்பு, இரத்தினபுரி, மாத்தளை, கேகாலை ஆகிய நகரங்களில் இயங்கி வருகின்றது.

ஸ்ரீயாணி டிரெஸ் பொயின்ட நிறுவனத்தின் நிறுவுனர் மாரியாபிள்ளை செல்வராஜ், நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளார். இவருடன் இயக்குனர்களாக மதுஷிகா செல்வராஜ், தினுஷிகா செல்வராஜ், சப்ரஜித் செல்வராஜ் ஆகியோர் நிறுவனத்தின் செயற்பாடுகளைக் கவனித்து வருகின்றனர்.

"நாம் எமது செயற்பாடுகளை நேர்மை, நாணயத்துடன் அனைத்து வாடிக்கையாளர்களையும் கவனித்து, பெரும்பாலான வாடிக்கையாளர்களின் நம்பிக்கையையும் பெற்றுள்ளோம். எம்முடைய ஒவ்வொரு நடவடிக்கையிலும் பொருளாதார சூழலில், சமூக காரணிகளையும் கருத்திற் கொண்டு பணியாற்றுகின்றோம் " என மதுஷிகா தெரிவித்தார்.

இத்தனை ஆண்டு காலமாக, ஸ்ரீயாணி டிரெஸ் பொயின்ட் தொடர்ந்தும் நகவநாகரீக ஆடை விற்பனைத் துறையில் தனது சேவைகள் மூலம் புதிய அலைகளைத் தோற்றுவித்த வண்ணமே இருக்கின்றது.

இப்போது, தனது புதிய வர்த்தக நாமமான *Khayal* இன் வெளியீடு மூலம், ஸ்ரீயாணி டிரெஸ் பொயின்ட் தன் மகுடத்தில் மற்றுமோர் மாணிக்கத்தை பதிக்கிறது. அண்மையில், கொழும்பு தாஜ் சமுத்திராவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது, இயக்குநர் தினுஷிகா, 'காயல்' குறித்துக் கூறியதாவது: 'காயல் *Khayal*' எனும் பதம் கற்பனைமயமான கொண்டாட்டங்களைக் குறிக்கின்றது. *Khayal* இன் அதிஅற்புத கலைநயமும் தரமும் நிகரற்றதாகும்".








காயலின் முதல் தொகுப்பின் கண்காட்சி, கடந்த சனிக்கிழமை (11), கண்டியில் அமைந்துள்ள 'ஏர்ல்ஸ் ரீஜன்சி' ஹோட்டலில் நடைபெற்றது. இந்தத் தொகுதியில் ஆடம்பரமான லெஹெங்காக்கள், நேர்த்தியாக நெய்யப்பட்ட கைத்தறிப் புடவைகள், உத்தியோகபூர்வ மிடுக்கான சூட்கள், பிலேஸர்கள், ஷர்வாணிகள் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

இவ்வுயர்தர தொகுப்பானது, மணமக்களுக்குத் தேவையான திருமண ஆடைவகைகளையும் கொண்டுள்ளது.

"திருமணத்திற்கான ஆடைகளென வரும்பொழுது, நாம் தென்இந்தியாவின் பாரம்பரியம்மிக்க நேர்த்தியான ஆடைகளை வழங்குவதுடன், காஞ்சிபுரப்பட்டுப் புடவைகளைக் கொண்டு வைபவத்துக்குச் செழுமை சேர்க்கின்றோம். இப்பாரம்பரியம் மிக்க புடவைகள், நிபுணத்துவம் மிக்க விற்பன்னர்களின் கைவண்ணத்தில், ஒளிமிகு அடர்த்தியான வர்ணங்களில், அலாதியான வடிவங்களுடன், இவை அனைத்தும் உருப்பெறுகின்றன" என தினுஷிகா குறிப்பிட்டார்.

# இராணுவம் உதவி

மாங்குளம், திருக்குடும்ப கன்னியர் மட சிறுவர் இல்லத்தில் வசிக்கும் 40 சிறார்களுக்கு, இராணுவத்தினரால் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு பாதுகாப்பு படை தலைமையகத்தின் 57 ஆவது காலாட் படைப்பிரிவு படையினரால், உலர் உணவுப் பொதிகளை வழங்கும் சமூக நலத்திட்டத்தை 57 ஆவது காலாட் படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் சந்திமல் பீரிஸின் பங்குபற்றலுடன்



முன்னெடுக்கப்பட்டது.

இவ் வேலைத்திட்டமானது, இராணுவத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க செல்வநகர் அருபுல் கால்நடை



பண்ணையின் உரிமையாளர் கோபால் நிரோஷன் வழங்கிய ரூ. 100,000.00 நிதி பங்களிப்பு மூலம் செயற்படுத்தப்பட்டது.

சுப்பிரமணியம் பாஸ்கரன்

# கலை நிகழ்ச்சியும் விடுகை விழாவும்

ரெயின்போ பாலர் பாடசாலையின் 11ஆம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு மாணவர்களுக்கான கலை நிகழ்ச்சியும் விடுகை விழாவும் சாய்ந்தமருது கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வின் பிரதம அதிதியாக ஷரீப் பௌண்டஷன் தவிசாளரும் தொழிலதிபருமான கலாநிதி ஷரீப் ஹக்கீம் கலந்து சிறப்பித்தார். முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் திறமை காட்டிய மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

பாறுக் ஷிஹான்







துருக்கி

# 8 நாள்களின் பின்னர் உயிருடன் மீட்கப்பட்ட ஐவர்

துருக்கியில் கட்டிட இடிபாடுகளில் சிக்கித் தவித்த ஐந்து பேர் 8 நாட்களுக்கு பின்னர் உயிருடன் மீட்கப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

துருக்கி- சிரியா எல்லையில் கடந்த 6 ஆம் திகதி ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் சுமார் 40,000 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்நிலையில் தெற்கு நகரமான ஹடேயில் நிலநடுக்கம் ஏற்பட்டு 204 மணி நேரத்திற்கு பிறகு இடிபாடுகளில் இருந்து ஒரு பெண்ணும், ஆணும் மீட்கப்பட்டதாக துருக்கிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

முன்னதாக, 198 மணி நேரத்திற்கு பிறகு, தென் துருக்கியில் இடிபாடு குவியலுக்குள் சிக்கியிருந்த 18 வயது இளைஞர் ஒருவர் மீட்கப்பட்டு, ஆம்புலன்ஸ் மூலம் வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.



இதனிடையே, கஹ்ராமன்மாராஸ் மாகாணத்தில் அடுக்குமாடி குடியிருப்பின் இடிபாடுகளில் இருந்து இரண்டு சகோதரர்களை மீட்புப் பணியாளர்கள் உயிருடன் மீட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.


ரஷ்யா

## உலகின் மிக நீண்ட பாதை

உலகிலேயே மிக நீண்ட பயணப் பாதையானது தென்னாப்பிரிக்காவின் கேப்டவுனில் தொடங்கி கிழக்கு ரஷ்யாவின் மகத்தான் டவுனில் முடிவடைகிறது.

இதனை ஒருவர் கூட இதுவரை நடந்து முடிந்தது இல்லை எனக் கூறப்படுகின்றது. இதன் மொத்த தொலைவு 22,387 கிலோமீற்றர் ஆகும். ரஷ்யா -தென் ஆபிரிக்கா வரையிலான இந்த பாதையில் மேம்பாலங்கள் மற்றும் சாலைகள் வழியாக பயணிகள் 17 நாடுகள் மற்றும் ஆறு பாலங்களை கடந்து செல்ல நேரிடும் எனவும், எந்த இடைவேளையும் இல்லாமல் ஒரு நபர் தொடர்ந்து நடந்தால் 182 நாட்களில் இந்த பயணத்தை முடித்து விடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நீண்ட பாதையின் தொலைவானது 13 முறை எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி இறங்குவதற்கு சமம் எனக் கூறப்படுகின்றது.



நியூஸிலாந்து

## நியூஸிலாந்தில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்:

நியூஸிலாந்தில் நேற்றைய தினம் சக்தி வாய்ந்த நிலநடுக்கமொன்று ஏற்பட்டுள்ளது.

நியூசிலாந்தின் லோயர் ஹட் பகுதியில் இருந்து 78 கி.மீ தொலைவில் 6.1 ரிச்டர் அளவில் இந்நில நடுக்கம் பதிவாகியுள்ளது.

உள்ளூர் நேரப்படி இரவு 7.30 மணியளவில் இந்நில நடுக்கம் ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

எனினும் இந்நில நடுக்கத்தினால் ஏற்பட்ட சேதவிவரங்கள் குறித்த தகவல் இதுவரை வெளியாகவில்லை.

நியூஸிலாத்தில் ஏற்பட்டுள்ள காப்ரியேல் புயல் காரணமாக பல்வேறு இடங்களில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஏற்பட்டு மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், தற்போது நிலநடுக்கமும் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## துருக்கி, சிரிய நிலநடுக்கம் –WHO எச்சரிக்கை



பேரழிவு ஏற்படுத்திய நிலநடுக்கத்தைத் தொடர்ந்து துருக்கி, சிரியாவில் நீர் மூலம் தொற்று நோய்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பின் ஐரோப்பிய பிராந்திய இயக்குநர் ஹன்ஸ் குளூஜ் கருத்துத் தெரிவிக்கையில், ” தண்ணீர் மற்றும் சுகாதார அமைப்பில் கடும் சேதத்தை இந்த நிலநடுக்கம் ஏற்படுத்தியுள்ளது. இதனால் தொற்று நோய்கள், நீர்வழி நோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளது” என்றார்.

அத்துடன் இது கடந்த 100 ஆண்டுகளில் ஐரோப்பா சந்தித்துள்ள மாபெரும் இயற்கைப் பேரழிவு என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தென் ஆபிரிக்கா

## லொறி, பஸ் நேருக்கு நேர் மோதி விபத்து: 20 பேர் உயிரிழப்பு

தென் ஆபிரிக்காவில், லொறியொன்றும் பஸ்ஸொன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 20 பேர் உயிரிழந்தனர்.

லிம்போபோ மாகாண நெடுஞ்சாலையிலேயே கடந்த 13 ஆம் திகதி இக் கோர விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் 20 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் எனவும் அறுபதுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும், அவர்களில் 10 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஜப்பான்

## பண்டயெடுத்த காக்கைகளால் பரபரப்பு

ஜப்பானிய தீவு ஒன்றில் ஆயிரக்கணக்கான காகங்கள், கூட்டம் கூட்டமாக சூழ்ந்த விசித்திர நிகழ்வு அரங்கேறியுள்ளது.

கியோட்டோவிற்கு அருகிலுள்ள ஹோன்ஷூவில் கட்டிடங்கள், வாகனங்கள் என எங்கு பார்த்தாலும் காகங்கள் சூழ்ந்திருப்பதைக் கண்டு மக்கள் அதிர்ச்சி அடைந்தனர்.



இந்நிகழ்வின் பின்னணியில் உள்ள காரணம் தெளிவாகத் தெரியவில்லை என்றாலும், விலங்குகள் அல்லது பறவைகள் அதிக எண்ணிக்கையில் ஒரே இடத்தில் கூடுவது இயற்கை பேரழிவின் தொடக்கத்தைக் குறிக்கிறதென்று சில அறிக்கைகள் தெரிவிக்கின்றன.



சம்பியன்ஸ் லீக்:

# பரிஸ் ஸா ஜெர்மைனை வென்ற பயேர்ண் மியூனிச்

### டொட்டென்ஹாமை வென்ற ஏ.சி மிலன்

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில், தமது மைதானத்தில் நடைபெற்ற ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச்சுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைன் தோற்றது.

மியூனிச் சார்பாகப் பெறப்பட்ட கோலை கிங்ஸ்லி கூமன் பெற்றிருந்தார்.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பருடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் இத்தாலிய சீரி ஏ கழகமான ஏ.சி மிலன் வென்றது. மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை பிரஹிம் டயஸ் பெற்றார்.



## ஆர்சனல் செல்லும் லொட்டரோ மார்டினெஸ்?

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான இன்டர் மிலனின் முன்களவீரரான லொட்டரோ மார்டினெஸைக் கைச்சாத்திடுவதில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான ஆர்சனலின் முகாமையாளர் அர்டிடா ஆர்வம் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், மிலனுடன் இன்னும் மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்தத்தைக் கொண்டுள்ள 25 வயதான மார்டினெஸை 80 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்ஸ்களுக்கு கைச்சாத்திட அக்கழகம் அனுமதிக்கும் எனத் தெரிகிறது.



## இந்திய குழாமில் இணையவுள்ள ஐயர்

அவுஸ்திரேலியாவுக்கெதிரான இரண்டாவது டெஸ்டுக்கான இந்தியாவின் குழாமில் ஷ்ரேயாஸ் ஐயர் இணையவுள்ளார்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் மருத்துவ அணியின் உடற்றகுதிச் சோதனையில் தேறியமையையடுத்து குழாமில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள ஐயர், இந்தியப் பதினொருவர் அணியில் சூரியகுமார் யாதவ்வைப் பிரதியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிம்பாப்வேக்கெதிரான தொடரை

## 1–0 எனக் கைப்பற்றிய மே. தீவுகள்

சிம்பாப்வேக்கெதிரான டெஸ்ட் தொடரை 1-0 என மேற்கிந்தியத் தீவுகள் கைப்பற்றியது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியானது வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த நிலையில், புலவாயோவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து நேற்று முன்தினம் முடிவுக்கு வந்த இரண்டாவது போட்டியை இனிங்ஸ் மற்றும் நான்கு ஓட்டங்களால் வென்றமையைத் தொடர்ந்தே தொடரை 1-0 என மேற்கிந்தியத் தீவுகள் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: சிம்பாப்வே

சிம்பாப்வே: 115/10 (துடுப்பாட்டம்: இனொசென்ட் கையா 38, டொனால்ட் ட்ரிபானோ ஆ.இ 23, கிறேய்க் எர்வின் 22 ஓட்டங்கள். பந்துவீச்சு: குடகேஷ் மோட்டி 7/37, ஜேஸன் ஹோல்டர் 2/18, அல்ஸாரி ஜோசப் 1/29)

மே. தீவுகள்: 292/10 (துடுப்பாட்டம்: றொஸ்டன் சேஸ் 70, றேமன் றீஃபயர் 53, ஜோஷுவா டா சில்வா 44, தங்னரைன் சந்திரபோல் 36, கைல் மேயர்ஸ் 30, ஜெர்மைன் பிளக்வூட் 22 ஓட்டங்கள். பந்துவீச்சு: விக்டர் நயுச்சி 5/56, பிரண்டன் மவுட்டா 3/73, வெலிங்டன் மஸகட்ஸா 1/58)



சிம்பாப்வே: 173/10 (துடுப்பாட்டம்: கிறேய்க் எர்வின் 72, இனொசென்ட் கையா 43 ஓட்டங்கள். பந்துவீச்சு: குடகேஷ் மோட்டி 6/62, ஷனொன் கப்ரியல் 1/20, அல்ஸாரி ஜோசப் 1/23, ஜேஸன் ஹோல்டர் 1/16, றொஸ்டன் சேஸ் 1/30)

போட்டியின் நாயகன்: குடகேஷ் மோட்டி

தொடரின் நாயகன்: குடகேஷ் மோட்டி

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 16 பெப்ரவரி 2023, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.